



# தமிழரசு

அக்டோபர் 16-31, 1999 ரூ. 5/






பெரம்பூரில் புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்



டவுட்டன் சந்திப்பில் புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்



பாந்தியன் சாலை -காசா மேஜர் சாலை சந்திப்பில் புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்



பீட்டர்ஸ் சாலை - கான்ரான்ஸ்மித் சாலை சந்திப்பில் புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்




பீட்டர்ஸ் சாலை - வெஸ்ட்காட் சாலை சந்திப்பில் புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்



மியூசிக் அகாடமி சந்திப்பில் புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்






## இந்த இதழில்...


★ டைடல் பார்க் ---------------------- 2

★ கணினி மயமாகும் தமிழகம் ------------- 4

★ எனது இலட்சியம் ------------------- 5

★ செய்திச்சரம் ---------------------- 8

★ க்ட்டபொம்மன் அஞ்சல்தலை வெளியீடு ----10

★ போலியோ தடுப்பு சிறப்பு முகாம் ----------14

★ நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக -----15

★ மட்சூசிடா குளிர்சாதன பெட்டி தொழிற்சாலை ----------------- 36

★ மேல்நிலைப் பள்ளிக் கட்டட திறப்பு விழா --- 40


★ கிங் நோய்த் தடுப்பு மருந்து நிலையம் ----- 42


### முதல் பக்க அட்டையில்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தரமணியில் அமைக்கப்பட்டு வரும் கணினி மென்பொருள் பூங்காவின் வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிடுகின்றார்.

### கடைசிப் பக்க அட்டையில்

வீரபாண்டிய கட்டபொம்மன் அஞ்சல்தலை வெளியீட்டு விழா




### திருக்குறள்

**பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை.**

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல், கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு, எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

*– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...*


# டைடல் பார்க்

பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த மனித ஆற்றல் தமிழகத்தில் நிறைந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டிலும் தமிழகத்திலுள்ள பொறியியல் கல்லூரிகளிலிருந்து ஏறத்தாழ 28,000 பொறியாளர்கள் வெளி வருகின்றனர். அவர்களில் ஏறத்தாழ 13,000 பொறியாளர் கணினியில் திறமை பெற்றவர்கள். மென்பொருள் உற்பத்தி ஆண்டுதோறும் 200 சதவிகித அளவிற்கு தமிழகத்தில் வளர்ச்சி பெற்றுவருகிறது. 1998–99இல் 12.5 பில்லியன் இந்திய ரூபாய் அளவுக்கு மென்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில் சென்னையில் ஏறத்தாழ 22,000 பேர் மென்பொருள் தொழிலில் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர்.

மென்பொருள் தொழிற்சாலைகள் மற்ற நகரங்களைவிட சென்னையில் அதிக அளவில் உள்ளன. தகவல் தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்டுள்ள துடன் சென்னை மாநகரம் மற்ற நகரங்கள் – நாடுகளுடன் மிகச் சிறந்த இணைப்பு வசதிகளையும், தடையற்ற மின்வசதி, சாலைகள், விமான நிலையங்கள், துறை முகங்கள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் போன்ற சிறந்த கட்டமைப்பு வசதிகளையும் கொண்டுள்ளது. கி.பி. 2008இல் 80 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு வாணிக நிலையை அடைந்திட வேண்டும் என்னும் மத்திய அரசின் இலக்கினை எய்துவதற்கு ஊக்கமளிக்கக் கூடிய முக்கிய மையமாக சென்னை திகழ்கிறது.

ஏற்கெனவே சென்னையில் 1.6 மில்லியன் சதுர அடி பரப்புள்ள இடம் மென்பொருள் தொழில்களுக்கு கிடைக்கும் நிலையுள்ளது. எனினும், மென்பொருள் நிறுவனங்களுக்கு தேவைப்படும் முக்கிய இடங்களை வழங்க வேண்டிய அவசரத் தேவையும் சென்னைக்கு உள்ளது. இப்பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1998 மார்ச் 27ஆம் நாள் தனது நிதி நிலை அறிக்கை உரையில், "சென்னை தரமணியில் 7.5 ஏக்கர் பரப்பில் எல்காட் நிறுவனத்துடன் இணைந்து மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை நிறுவும் முயற்சியில் டிட்கோ முனைந்துள்ளது இத்திட்டம் மென்பொருள் நிறுவனங்களுக்கு தேவையான வசதிகளை உலகத்தரத்திற்கு இணையாக உருவாக்கி வழங்கும்". – என்று அறிவித்தார்கள். தமிழ்நாடு சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்ட அந்த அறிவிப்பினை நிறைவேற்றுவதற்காக இந்த டைடல் பார்க் திட்டமிடப்பட்டுள்ளது. டைடல் பார்க் திட்டம், 2000ம் ஆண்டு மே மாதத்திற்குள் ஒரு மில்லியன் சதுர அடி பரப்புள்ள அலுவலக வசதிகளை மென்பொருள் தொழில் நிறுவனங்களுக்கு உருவாக்கி வழங்கிடும் திட்டமாகும். டைடல் பூங்காவில் கட்டுமான இடத்தின் மொத்த பரப்பு ஏறத்தாழ 1.2 மில்லியன் சதுர அடியாகும். டைடல் பூங்கா, டிட்கோ மற்றும் எல்காட் நிறுவனங்களால் உருவாக்கப்படுகிறது. இது வணிக வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், முதலீட்டுக் கழகங்கள் ஆகியவற்றையும் EPC ஒப்பந்ததாரர்களை பங்குதாரர்களாகவும் கொண்டுள்ளது. டைடல் பூங்காவின் திட்ட மதிப்பீடு ரூ.320 கோடி. தமிழ்நாடு அரசு நகரின் முக்கிய பகுதியில் 8 ஏக்கர் நிலத்தினை இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து பெரும் பங்காற்றியுள்ளது. மேலும், டைடல் திட்டத்திற்கு கடன் வழங்குவதற்கும் உறுதி அளித்துள்ளது.

டைடல் பூங்காவின் கட்டடம் தரைத்தளத்துடன் 12 மேல் தளங்களையும், கார்களை நிறுத்திட 2 தரைகீழ்த் தளங்களையும் கொண்டு அமையும். அலுவலக உபயோகத்திற்கான இடங்கள் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான அலுவலகங்களின் வசதிக்கு ஏற்ப அமைக்கப்பட்டு வருகிறது. பல்வேறு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் தேவைக்கேற்ப 4,000 சதுர அடியிலிருந்து 90,000 சதுர அடி வரை ஒரே தளத்தில் இடவசதிகள் அமையும். அகன்ற இடவசதிகளும், சிறந்த தகவல் தொடர்பு வசதிகள், தடையற்ற மின்வசதி (ஜெனரேட்டர் வசதிகளுடன்)



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 20–10–99 அன்று, சென்னை தரமணியில் அமைக்கப்பட்டு வரும் கணினி மென்பொருள் பூங்காவின் வளர்ச்சிப் பணிகளை பார்வையிட்டு அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

ஆகியவைகளும் அமையும். VSNL, STPI ஆகிய நிறுவனங்கள் தகவல் தொடர்புக்குத் தேவை யான அலைவரிசைகளை இங்கு நிறுவும். தமிழ்நாடு மின்வாரியம் 110 கி.வாட் திறன் உள்ள தனி மின் நிலையத்தை இங்கு அமைத்து வருகிறது.

சென்னை துரித ரயில் மூலம் சென்னை விமான நிலையத் திற்குச் செல்ல வகை செய்யப் படும். இப்பூங்காவில் வணிக வங்கிகள், கடைகள், சுகாதார மையங்கள், மாநாட்டுக் கூடங்கள், வணிக மையங்கள், சிற்றுண்டிச் சாலைகள், நீச்சல் குளம், டென்னிஸ் விளையாட்டு மைதானம், விருந்தினர் இல்லங்கள் ஆகியவைகளும் அமைக்கப்படுகின்றன. தகவல் தொடர்புத் துறை (DOT) இப்பூங்காவிற்கான நவீன வசதிகளுடன் தனித்தன்மை வாய்ந்த தொலைபேசி நிலையத்தை அமைத்து டைடலில் நுகர்வோர் கோரிக்கை வைத்தவுடன் தொலைபேசி இணைப்புகளை உடனுக்குடன் அளித்திட முன்வந்துள்ளது. செய்திகளை அனுப்புவதற்குத் தேவையான அனைத்து நவீன வசதிகளும் இங்கு அமைக்கப்படுகின்றன. தரை வழியாகவும், செயற்கைக் கோள் வழியாகவும், நுண்ணலைகள் மூலமாகவும் செய்திகளை பரிமாறிக்கொள்வதற்கு ஏற்ப இக்கட்டடத்தின் மேல் தளத்தில் வசதிகள் செய்யப்படுகின்றன.

அனைத்து வகையிலும் நவீன தேவைகளை ஈடு செய்வதற்கு ஏற்ப டைடல் கட்டட வசதிகளைக் கொண்டிருக்கும்.

டைடல் பூங்காவை அமைப்பதற்காக மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் 21.8.1998 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. 1999 பிப்ரவரியில் இதன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு இதுவரை 70 விழுக்காடு கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கொரியா நாட்டின் திருவாளர்கள் ஹூண்டாய் இன்ஜினீயரிங் மற்றும் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனமும், லார்சன் அண்டு டூப்ரோ நிறுவனமும் இணைந்து கட்டடப் பணிகளை மேற்கொண்டுள்ளன. இக்கட்டடம் கட்டுவதற்கு பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து வெளிப்படையான விலைப்புள்ளிகள் கோரப்பட்டன. டைடல் பூங்கா உரிமையாளர்களின் ஆலோசகர்களாக திருவாளர்கள் டாடா கன்சல்ட்டிங் இன்ஜினீயர்ஸும், கட்டட வடிவமைப்பாளராக திரு. சி.ஆர். நாராயணராவ் அவர்களும் உள்ளனர். டைடல் பார்க் 2000ஆம் ஆண்டு மே மாதத்தில் செயல்படுவதற்கு தயாராகும்.

திருவாளர்கள் Jones Lang LaSalle, Cushman & Wakefield and Colliers Jardine ஆகிய மூன்று உலகப் புகழ் பெற்ற வணிக முகமைகள் இப்பூங்காவின் வணிக நிறுவனங்களாகச் செயல்படும். ஏற்கெனவே இக்கட்டடத்தின் மூன்றில் ஒரு பங்கு அளவுள்ள இடம் 20 நடுத்தர, பெரிய, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இடங்களையும் தேவைப்படுபவர்களுக்கு இப் பூங்காவைத் தொடங்குவதற்குள் வழங்குவதற்கான முயற்சிகளை டைடல் மேற்கொண்டுள்ளது.

இப்பூங்காவின் இயக்கமும் பராமரிப்புப் பணிகளும் திறமையும் அனுபவமும் வாய்ந்த பன்னாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும். நாட்டில் உள்ள மற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் போல் அல்லாமல், டைடல் பூங்கா நகரின் மையத்தில், விமான நிலையத்திலிருந்து 20 நிமிடங்களில் சென்றடையக் கூடிய வகையில் அமைந்துள்ளது. மிகப் பெரிய பன்னாட்டு மென்பொருள் தொழிற்கூடமாக டைடல் உருவாகும் வகையில் தமிழ்நாடு அரசு மிகப் பெரிய அளவில் முதலீடு செய்துள்ளது. தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சிக்கு புதிய நூற்றாண்டின் சிறப்புப் பரிசாக டைடல் நிறுவனத்தை தமிழ்நாடு அரசு உருவாக்குகிறது. ★

# கணினி மயமாக தமிழகத்தை ஆக்கிட முதலமைச்சர் கலைஞரின் தீவிர முயற்சி

பள்ளிகளில் கல்வி பயின்று வெளியே வரும் மாணவர்கள் அனைவரும் கணினி அறிவு பெற்றவர்களாகத் திகழ வேண்டும் என்னும் நோக்கத்துடன் தமிழகம் முழுவதிலுமுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் நடப்பு ஆண்டு முதல் கணினி அறிவியல் விருப்பப்பாடமாகக் கற்பிக்கப்படும் என இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்.

**வள்ளுவர் கோட்டத்தில் விழா**

முதல்வர் அறிவித்தபடி முதற்கட்டமாக 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் முப்பதாயிரம் மாணவர்கள் பயனடையும் வகையில் 112 கோடி ரூபாய் செலவில் கணினிப் பாடம் கற்பிக்கும் திட்டம் 5.10.1999 அன்று சென்னை வள்ளுவர்கோட்டத்தில் நடைபெற்ற விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் திரு. கிருஷ்ண்காந்த் அவர்களால் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி கணினியில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 666 பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ள இந்த கணினிப் பயிற்சி வகுப்பு வரும் ஆண்டில் மீதமுள்ள 600 பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.

தற்போது +1 மற்றும் +2 மாணவர்களுக்கு மட்டும் அளிக்கப்படும் இப்பயிற்சி, வரும் ஆண்டுகளில் 10, 9, 8, 7 மற்றும் 6ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் அளிக்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

**பொதுமக்களும் கணினிப் பயிற்சிபெற ஏற்பாடு**

மேலும் பள்ளி நேரங்களில் பள்ளி மாணவர்களும், பள்ளி நேரத்திற்குப்பின் பொதுமக்களும் இம்மையங்களில் கணினிப் பயிற்சி பெறலாம் என்றும் அரசு அறிவித்துள்ளது.

சமுதாயத்தின் எல்லா முனைகளிலும் கணினி ஏற்படுத்தி வரும் தாக்கத்தையும், மாற்றத்தையும் தகவல் தொழில்நுட்பம் அடுத்த நூற்றாண்டின் முன்னோடி விஞ்ஞானமாகத் திகழ இருப்பதையும் கருத்தில் கொண்டு தமிழ்ச் சமுதாயம் விஞ்ஞான வேகத்திற்கு ஈடுகொடுத்து பீடுநடை போட வேண்டும் என்ற நோக்கத்தோடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் காட்டிடும் மிகுந்த ஆர்வத்தின் காரணமாக தமிழகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், பத்திரப்பதிவு அலுவலகங்களிலும் கணினி மயமாக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

இந்த கணினி மயமாக்கும் திட்டம் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில்தான் தீவிரமாகவும், முனைப்புடனும் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



கணினி மயமாக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டம் பள்ளிகளில் எப்படி நடைபெறுகிறது என்பதை அறிய எந்த முன்னறிவிப்பும் இன்றி 25.10.99 அன்று மாலை சென்னைக்கு அருகில் உள்ள பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளிக்கு சென்றார்.

பள்ளிகளில் கற்பிக்கப்படும் கணினி பாடத்திட்டம் குறித்து ஆசிரியர்களிடம் விபரமாக கேட்டறிந்த முதலமைச்சர் அவர்கள், கணினிப் பயிற்சிப்பெறும் மாணவர்களிடமும் பயிற்றுவிக்கும் முறை குறித்து கேட்டறிந்தார்.

**தனியார் நிறுவனம் மூலம் கணினிப் பயிற்சி**

பூவிருந்தவல்லி அறிஞர் அண்ணா அரசு மேல் நிலைப் பள்ளியில் மட்டும் 42 மாணவர்களுக்கு இந்த கணினிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சியினை 'நிட்' (NIIT) எனும் தனியார் நிறுவனம் மாணவர்களுக்கு வழங்குகிறது. இதில் பயிற்சி பெறும் மாணவர்கள் எல்லோரும் கிராமப்புற மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு இந்த கணினிப் பயிற்சியினை ஆசிரியைகள் இருவர் சிறந்த முறையில் வழங்கி வருகின்றனர். ★

# எனது இலட்சியம்

## சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் வரை நீண்ட தொழில் நகரம் உருவாக்குவதே

**– முதலமைச்சர் கலைஞர்**

இன்று ஒரு மகிழ்ச்சியான நாள். அந்த மகிழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு கொண்டாடுகின்ற வகையில், ஹுண்டாய் மோட்டார் கார் தொழிற்சாலையின் நிர்வாகிகளும், நண்பர்களும் இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். ஒரு புதிய காரை அறிமுகப்படுத்துவது மாதிரி இல்லாமல் ஒரு புதிய கதாநாயகரை அல்லது கதாநாயகியை அறிமுகப்படுத்துவதைப்போல இந்த மேடையில் இந்தக் கார் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வளவு எழிலார்ந்த முறையில் மின்வெட்டுக்களென ஒளிக்கீற்றுகள் சிதறிப்பாய இந்தக் காரை இந்த நிறுவனத்தார் அறிமுகப் படுத்தியிருக்கிறார்கள்.

**விரும்பிய காலக் கெடுவிற்குள் ஹுண்டாய் நிறுவனத்துக்கு நிலம்**

**6-7-96** அன்று நாங்கள் ஆட்சிக்கு வந்த சில மாதங்களுக்குப் பிறகு *ஹுண்டாய் கார் தொழிற்சாலை தமிழகத்திலே அமைப்பதற்கான ஒப்பந்தம்* கையெழுத்தாயிற்று. இருங்காட்டுக் கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் இத்தொழிற்சாலைக்காக ஏறத்தாழ **530** ஏக்கர் நிலத்தை அவர்கள் விரும்பிய காலக்கெடுவிற்குள் தமிழக அரசு மிக விரைவாக வழங்கியது.

இந்தத் தொழிற்சாலை அமைக்கும் பணிக்காக **10.12.1996**-ல் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த விழாவில் நான் கலந்து கொண்டேன். இத்தொழிற்சாலை **2,450** கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதன் சோதனை உற்பத்தி **27.5.1998**-ல் தொடங்கியது. மாபெரும் தொழிற்சாலையை நிறுவும் பணி பதினாறே மாத காலத்தில் நிறைவேற்றப்பட்டு, சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கின்றது என்பதை இங்கே நான் தெரிவிக்க மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இதன் வணிக உற்பத்தி **9.10.98** அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டது.

ஆண்டு ஒன்றுக்கு 1 இலட்சத்து 20 ஆயிரம் கார்களையும், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் என்ஜின்களையும் உற்பத்தி செய்யும்



திறன் பெற்றுள்ளது இந்தத் தொழிற்சாலை. மிகவும் மகிழ்ச்சியடையக் கூடியது என்னவென்றால், இதுவரையில் 2,192 பேருக்கு வேலைவாய்ப்பினை இந்தத் தொழிற்சாலை வழங்கியுள்ளது என்பது தான். இந்த 2,192 பேரில் 90 சதவிகிதத்திற்கு மேல் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க, மகிழ்ச்சியடையத்தக்க ஒன்றாகும்.

### இந்தியாவில் மிகப்பெரிய வெற்றியை ஈட்டி வருவது ஹூண்டாய் நிறுவனம்

இவர்கள் உற்பத்தி செய்துள்ள சேன்ட்ரோ, 1000 சி.சி. கார் இந்தியாவில் மிகப்பெரிய வெற்றியை ஈட்டியுள்ளது. சேன்ட்ரோ கார் உற்பத்தி தொடங்கிய ஒரு ஆண்டிற்குள்ளாக அவர்கள் குறிப்பிட்டதைப் போல 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கார்களை விற்பனை செய்துள்ளது என்பது பாராட்டத்தக்க ஒரு அம்சமாகும்.

இந்த நிறுவனத்தின் புதிய வெளியீடாக 'அக்செண்ட் கார்' இன்றைக்கு அறிமுகமாகிறது. நவீன தொழில் நுட்பம் அனைத்தும் கொண்டதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. (Incorporating all latest technology), வித்தியாசமான முறையில் அதிநவீன வடிவமைப்பு (A different, Yet Modern Design) – முன்புற வடிவழகு, அதே பாங்கில், பின்புற–பக்கவாட்டுத் தோற்றங்களின்அமைப்பு– (Attractive frontal view and are equally contemporary side and rear view) மிகவும் நயமான விலை (Very attractive pricing)– புத்தம் புதிய தொழில் நுட்பம் (Lastest Technology) ஆகியவற்றைக் கொண்டது இந்த அக்செண்ட் கார்.

உட்புறத்தில் ஒய்யாரமான (Luxury), நேர்த்தி மிகுந்த (Elegance) பயன்பாட்டிற்குகந்த (Practicality), உட்புற அழகு நிறைந்தது இந்த அக்செண்ட் கார்.

வெளிப்புறத்தில் மற்ற கார்களை விட காண்போரை அயர வைக்கும் அருமையான தோற்றத்தினையும் கொண்டுள்ளது.

### 3 பெரிய கார் தொழிற்சாலைகள் சென்னைக்கு அருகே உருவாக அரசு உதவி

ஹூண்டாய்கார் தொழிற்சாலை தவிர தமிழகத்திலே தொடங்கப்பட்ட புதிய இரண்டு கார் தொழிற்சாலைகள் 1996–க்குப் பின் இந்த அரசு 3 பெரிய கார் தொழிற்சாலைகளை சென்னைக்கு அருகே நிறுவிட உதவியிருக்கிறது. அவற்றுள் ஒன்று தான் இந்த மாபெரும் சாதனை படைத்துள்ள ஹூண்டாய் கார் நிறுவனமாகும்.

இரண்டாவதாக மிட்சுபிஷி லான்சர் கார் தொழிற்சாலை 320 கோடி ரூபாய் செலவில் திருவள்ளூரில் கடந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவதாக மறைமலை நகரில் 1,700 கோடி ரூபாய் முதலீட்டில் ஃபோர்டு மோட்டார்ஸ் கார் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர, வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் பல தொழிற்சாலைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றின் காரணமாக தமிழகம் "இந்தியாவின் டெட்ராய்ட்" என்கின்ற பெரும் புகழைப் பெற்றிருக்கிறது என்பதையும் மிகுந்த பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

### தலைசிறந்த பத்திரிகை நிருபரின் மனம் திறந்த பாராட்டு

மார்க் நிக்கல்சன் என்கிற தலைசிறந்த பத்திரிகை நிருபர், 10.4.1997 நாளிட்ட (financial Times) பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதிலே அவர் குறிப்பிடுகிறார்– Tamil Nadu's Car Industry is perhaps the most spectacular Result of the race between States to attract foreign investment and develop new industries'. அதாவது "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து புதிய தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக்கிடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது' என்று அவர் பாராட்டியிருக்கிறார்.

### இங்கிலாந்து வாகன சங்க விற்பனை மேலாளர் புகழாரம்

அதைப் போலவே பிரிட்டிஷ் மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்கள் – விற்பனையாளர்கள் சங்கத்தின் பன்னாட்டு விற்பனை மேலாளர் திரு.பெர்னார்டு ஃபின்ட்லே சென்னையில் வாகன உற்பத்தித் தொழில்களுக்குரிய வாய்ப்புகள் குறித்து இங்கு நேரில் வந்து ஆய்வு செய்தபின், அவர் சொல்லுகிறார்.

"I don't think anywhere else in the World at this point offers this level of opportunities to the British Auto Component Industries", says Mr. Bernard Fintlay. International Trade Manager for the British Society of Motor Manufacturers and Traders recently after a reconnaissance in Madras".

அதாவது, "பிரிட்டிஷ் வாகன உதிரிபாகத் தொழில்களுக்கு இங்கு கிடைக்கும் அளவுக்கு உதவிகளும் வாய்ப்புகளும் உலகில் எந்த ஒரு பகுதியிலும் கிடைக்கும் என்று நான் கருதவில்லை" – என்று அவர் குறிப்பிடுகிறார். அத்தகைய தொழில் வளர்ச்சியில் பெரும் அக்கறையை தமிழக அரசு இன்றைக்குக் காட்டி வருகின்றது. உங்களுக்குத் தெரியும், திரும்பத் திரும்ப நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

1989–90ல் மூன்றாவது இடத்தில் இருந்த நம்முடைய தொழில் முதலீடுகள் பின்னர் ஐந்தாவது இடத்திற்குத் தள்ளப்பட்டு இப்போது இந்தியாவிலே மராட்டியத்தையும் வென்று தமிழகம் முதல் இடத்திலே இருக்கின்றது என்ற செய்தியைச் சொல்லி அந்தப் பெருமையை மேலும் உயர்த்துகின்ற அளவிற்கு ஹூண்டாய் நிறுவனம் உதவிகரமாக உள்ளது என்று கூறி புதிய காரின் வரவை நான் வாழ்த்துகிறேன்.

**இருங்காட்டுக்கோட்டை இன்று ஒளிமயமான நகரானது**

என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களை இந்த நிறுவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் வழியில் இருங்காட்டுக்கோட்டை – இருங்காட்டுக் கோட்டை என்றாலே இருள், காடு, கோட்டை என்ற மூன்ற சொற்களைக் கொண்டது. இன்றைக்கு அந்த ஊரைப் பார்த்தால் ஒளி மயமான ஒரு புதிய நகரமாக அது உருவாகியிருக்கின்றது.

அதற்கு வழி வகுத்துக் கொடுத்தது இந்த ஹூண்டாய் தொழிற்சாலை என்பதையும் எடுத்துக்காட்டி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய ஆசை இருங்காட்டுக்கோட்டை மாத்திரமல்ல, பக்கத்திலே உள்ள பகுதிகள் மாத்திரமல்ல, சென்னையிலிருந்து பெங்களூர் செல்லும் வரையில் ஒரு புதிய நீண்ட நகரத்தை – தொழில் நகரத்தை உருவாக்குவதற்கு நாம் தயாராக இருப்போம். அதற்கான ஊக்கத்தை வழங்குவோம். அந்த ஊக்கத்தை நீங்களும் இந்த அரசுக்குத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அளவில் என்னுடைய வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

*– சென்னை – தாஜ்கோரமண்டல் ஓட்டலில் நடைபெற்ற விழாவில் –ஹூண்டாய் மோட்டார் கம்பெனி நிறுவனத்தின் புதிய தயாரிப்பான 'அக்சென்ட்' காரின் விற்பனைய **15–10–1999** அன்று தொடங்கி வைத்து உரையாற்றினார்.* ★

---

# பிற மாநிலங்களுக்கு முன் உதாரணமாக விளங்கும் சமத்துவபுரம் திட்டம் தமிழக அரசுக்கு தேர்தல் பார்வையாளர்கள் பாராட்டு

பிற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக உன்னத அறிமுகப்பாட்டின் அடிப் படையில் தமிழக அரசு சமத்துவபுர திட்டத்தை அறிமுகப்படுத்தி, சிறப்பாக செயல்படுத்தி வருவதாக தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் பார்வையாளர்கள் தமிழக அரசுக்குப் பாராட்டுத் தெரிவித்தனர்.

அக்டோபர் 7ம்தேதி குருங்குளம் சமத்துவபுரத்தை தஞ்சை மாவட்ட ஆட்சியர் டாக்டர் மூ. ராஜாராம் தஞ்சை தொகுதியின் தேர்தல் பார்வை யாளர்களான மேகாலயா எரிசக்தித்துறை செயலாளர் திரு. கிங்ஜிங், ஒரிசா மாநில வளர்ச்சி இயக்குனர் திரு. சுவப்பேஸ்வர பையா, மும்பை மாநில வருமான வரி ஆணையர் திரு.பிரசாத் ஆகியோருக்கு சுற்றிக்காண்பித்தார்.

அப்போது சமத்துவபுரத்தில் உள்ள வீடுகள், சமுதாய கூடம், கம்ப்யூட்டர் மையம், மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி, தெரு விளக்குகள், தார்ச் சாலை வசதி, வடிகால் வசதி, தாய்சேய் நல மையம், குழந்தைகள் நல மையம், நியாய விலைக்கடை, நூலகம், சிறுவர் பூங்கா, தொலைபேசி வசதி, சமுதாயத் தகவல் மையம், பால் கூட்டுறவுச் சங்கம், தீவனப் பயிர்த் தோட்டம், கால்நடை கலைக்கூடம், பால் கூட்டுறவு சங்கம் ஆகிய பிற அடிப்படை வசதிகளையும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் சாதி ஏற்றத் தாழ்வுகளை அகற்றவும், மக்களிடையே சமத்துவ உணர்வு ஓங்கவும் தமிழக அரசு இத்திட்டத்தை செயல்படுத்தி வருவதுடன் பட்டுக்கோட்டை வட்டம் சுக்கிரம்பட்டி, ஒரத்தநாடு வட்டம் நெய்வாசல், கும்ப கோணம் வட்டம் சோழன் மாளிகை ஆகிய இடங்களிலும் சமத்துவபுரங்கள் அமைக்க பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் டாக்டர் மூ.இராசாராம் தேர்தல் பார்வையாளர்களிடம் எடுத்துக்கூறினார்.

தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியின் தேர்தல் பார்வை யாளர்கள் குருங்குளம் சமத்துவ புரத்தைப் பார்வையிட்டு பிற மாநிலங்களுக்கு முன் உதார ணமாக உன்னத கோட்பாட்டின் அடிப்படையில் தமிழக அரசு சமத்துவபுர திட்டத்தை அறிமுகப்படுத்திச் சிறப்பாகச் செயல் படுத்தி வருவதையும், தன்னார்வத் தொண்டு நிறுவ னங்கள் மற்றும் கொடையுள்ளம் கொண்ட பெரியோர்கள் உறு துணையுடன் சமத்துவபுரத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் செயல் வடிவம் பெற்று வருவதையும் பாராட்டினார். ★

செய்திச் சரம்

## வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு

1997–98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதலமைச்சர் அறிவித்துள்ள வளர்ச்சிப் பணிகளும், வேலைவாய்ப்புப் பணிகளும், நல்வாழ்வுத் திட்டங்களும் மற்றும் மாவட்டங்களில் தொடர்ந்து நடைபெற்று வரும் அனைத்து அமைச்சகங்களின் எல்லா பணிகளும் திட்டமிட்டபடியும், அறிவித்தபடியும் நடைபெறுகிறதா என்பதை கண்காணிக்க ஆற்றல் மிகு அதிகாரிகளைக் கொண்ட "வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு" ஒன்று (Cell for Monitoring Development Programmes) முதலமைச்சர் அலுவலகத்தில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி முதலமைச்சர் அலுவலகத்தில் "வளர்ச்சிப் பணி கண்காணிப்புக் குழு" அமைக்கப்பட்டது. தற்போது இதன் பணிகளை விரிவுபடுத்தி, செயலாக்கத்தை வலுப்படுத்திட மூத்த அதிகாரிகளைக்கொண்ட ஒரு குழு அமைத்து, வளர்ச்சிப் பணிகளை கண்காணிக்க 'முதலமைச்சர் செயலகம்' (Chief Minister's Secretariat) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் இந்த செயலகத்தில், திரு.ஆர். சந்தானம், இ.ஆ.ப., செயலாளராக இருப்பார்.

திரு.கே. அசோக் வரதன் ஷெட்டி, இ.ஆ.ப., சிறப்புச் செயலாளராகவும், திரு. வெ.இறையன்பு, இ.ஆ.ப., இணைச் செயலாளராகவும், திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., துணைச் செயலாளராகவும் பணிபுரிவார்கள்.

## உழவர் சந்தை
## (FARMERS' MARKET)

வளர்ச்சிப் பணிகளை கண்காணிக்கும் முதலமைச்சரின் செயலக அலுவலர்கள் இன்று காலை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை 25–10–99 அன்று சந்தித்து அறிவுரை பெற்றனர். இக்கூட்டத்தில் தலைமைச் செயலரும் மற்றும் நிதிச் செயலரும் கலந்துகொண்டனர்.

விவசாயிகள் தங்களுடைய உற்பத்தி பொருட்களை எந்தவிதமான இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லாமல் விற்பனை செய்வதற்கு வசதியாக **'உழவர் சந்தை'** என்கின்ற நேரடி விற்பனை முறையை இந்த அரசு அறிமுகப்படுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி விவசாயிகளே தங்கள் பொருட்களை விற்கவும் அதைத் தாங்களாகவே தகுந்த விலையில் பெற்றுக்கொள்ளவும் வழிவகைசெய்யப்படும். சந்தையில் பொருட்களுக்கான நிலவரம் அடங்கிய விலைப்பட்டியல் குறிப்பிடப்பட்டு அதன்மூலம் விற்பவருக்கும், வாங்குபவருக்கும் விலை, பொருட்கள் நிலவரம் ஆகியவற்றைத் தெரிவிக்கவும் வழிவகை செய்யப்படும். இந்த உழவர் சந்தையில் பொருட்களை கொண்டுவருபவர்கள் உற்பத்தி பொருட்களை பாதுகாப்பதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் அரசின் சார்பில் செய்துகொடுக்கப்படும். நகராட்சிப் பகுதிகளிலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் இந்த உழவர் சந்தை முறையை அரசு ஏற்று நடத்த உத்தேசித்துள்ளது. மேலும், இதற்கான இடத்தை வழங்க முன்வரும் நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அளித்து முதற்கட்டமாக 100 இடங்களில் சந்தையை அரசு அமைக்க முடிவுசெய்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் உழவர்கள் நேரடியாக விற்பனையில் பங்கேற்று தங்கள் பொருட்களுக்கான விலையைப் பெற்றுக்கொள்ளவும், அவர்கள் இடைத்தரகர்கள் குறுக்கீடு இல்லாமல் உற்பத்தியாளரும், நுகர்வோர்களும் நேருக்குநேர் பங்குபெறுவது நிகழும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த உழவர் சந்தைக்கான வழி முறைகளையும் அவற்றை செயல்படுத்துவது குறித்த திட்டங்களையும் தேவைப்படும் போக்குவரத்து உட்பட அனைத்து வசதிகளையும் வகுக்குமாறு முதலமைச்சரின் செயலகத்திற்கு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

# தமிழ்நாட்டில் நாஃப்தா க்ராக்கர் மற்றும் பாலிமர்-பெட்ரோலிய இரசாயனத் தொழில் வளாகம் முதல்வர் கலைஞர் முன்னிலையில் ஒப்பந்தம்

சென்னை-தலைமைச்செயலகத்தில், 5-10-99 அன்று முதல்வர் கலைஞர் முன்னிலையில், தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் எத்திலின் உற்பத்தி செய்யும் நாஃப்தா க்ராக்கர் தொழில் வளாகம் ஒன்றை நிறுவுவதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (டிட்கோ), ஜப்பான் நாட்டைச் சேர்ந்த மிட்சுயி அண்டு கம்பெனியும் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. இந்த நிகழ்ச்சியின்போது மத்திய அரசின் தொழில்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன், தலைமைச் செயலாளர் திரு. ஏ.பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ்., சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் ரியுச்சி இஷி, தொழில்துறை செயலாளர் திரு. எம்.எஸ். சீனிவாசன், இ.ஆ.ப., டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். கோபாலன், இ.ஆ.ப., மிட்சுயி கம்பெனியின் இயக்குநர் திரு.நகாய் ஆகியோர் உடனிருந்தனர்.

எத்திலின் தவிர, இந்தப் பெட்ரோலிய இரசாயனத் தொழில் வளாகத்தில், ஆண்டொன்றுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் ப்ரோப்புலின் மற்றும் 1 இலட்சத்து 65 ஆயிரம் டன் சி-4 கலவைகளும் உற்பத்தியாகும். இந்த உற்பத்திப் பொருட்களின் மூலம் ஆண்டொன்றுக்கு 3 இலட்சத்து 50 ஆயிரம் டன் வாயு அடிப்படையிலான பாலி எத்திலின், 1 இலட்சத்து 50 ஆயிரம் டன் கலவை பாலி எத்திலின் மற்றும் 2 இலட்சத்து 50 ஆயிரம் டன் பாலி ப்ரோப்புலின் ஆகியவையும் தயாரிக்கப்படும். மேலும் பென்சீன், புட்டாடின் மற்றும் இதர பெட்ரோலிய இரசாயன பொருட்களும் இவ்வளாகத்திலிருந்து பெறப்படும்.

இந்த பெட்ரோலிய இரசாயனத் தொழில் திட்டம் 7 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் மொத்தம் 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

பெட்ரோலிய இரசாயன பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைப்பகத்தில் ஜப்பான் நாட்டின் மிட்சுயி நிறுவனமும், அதன் துணை நிறுவனங்களும் மிகுந்த அனுபவமும், உலகச் சந்தையில் பலமும் வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

# தியாகராஜ பாகவதரின் மனைவிக்கு ரூ.50,000 நிதியுதவி

**- முதல்வர் கலைஞர் ஆணை**

இசை உலகிலும், நாடகம் மற்றும் திரை உலகிலும் பெரும்புகழ் பெற்றவர் மறைந்த எம்.கே.தியாகராஜ பாகவதர். அவருடைய துணைவியார் திருமதி ராஜம்மாள் முதுமையின் காரணமாகவும், வறுமையினாலும் மிகவும் சிரமப்படுவதாகவும், உதவிட வேண்டுமென்றும் அவர் கொடுத்த விண்ணப்பத்தைத் தொடர்ந்து, அவருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக 50,000 ரூபாய் வழங்கிட முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

# பசும்பொன் தேவர் திருமகனார் நினைவாஞ்சலியை முன்னிட்டு வழக்குகள் வாபஸ்

*முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு*

தென் மாவட்டங்களில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில், சில சமூகங்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல்களைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட வழ்க்குகளை வரும் **30.10.1999** பசும்பொன் தேவர் திருமகனார் நினைவாஞ்சலி நாளை முன்னிட்டு திரும்பப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு தலைமைச் செயலக அதிகாரிகளுக்கும் மாவட்ட அதிகாரிகளுக்கும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

கொலை, கற்பழிப்பு, தீ வைப்பு போன்ற வழக்குகள் தவிர பிற வழக்குகளைத் திரும்பப் பெறவதற்கு இந்த உத்தரவு பொருந்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எல்லா சமூகத்தினரும் தமக்குள் ஒரு நல்லிணக்கம் ஏற்படுத்திக் கொள்வதற்கான அடையாளமாக இதனை எடுத்துக் கொண்டு ஒற்றுமையும் அமைதியும் காத்திட முன் வரவேண்டுமென முதலமைச்சர் கலைஞர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கட்டபொம்மன் அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில் கலைஞர்

1974 ஆம் ஆண்டு பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுடைய நினைவைப் போற்றுகின்ற விழா நடைபெறுகின்றது. அதிலே கலந்துகொள்ள வேண்டுமென்று என்னை பொதுவுடைமை இயக்கத்தினுடைய வீரத்திருமகன் மணலி கந்தசாமி எம்.எல்.ஏ. அவர்களும் அந்த இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவராக அன்று விளங்கிய தம்பி க.சுப்பு, எம்.எல்.ஏ., அவர்களும் அழைத்தார்கள். அந்த நிகழ்ச்சியிலே நானும், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் கலந்து கொண்டோம். அன்றைக்குத்தான் கட்டபொம்மனின் கோட்டையைத் திரும்பக் கட்டுவதென்ற முடிவினை அந்த விழாவிலே நான் அறிவித்தேன். அறிவித்தவாறு அந்தக் கோட்டை கட்டி முடிக்கப்பட்டது. கட்டபொம்மனின் சிலையும் ஊமைத்துரையின், வெள்ளையத்தேவனின், அதைப் போலவே சுந்தரலிங்கத்தின் அந்த வீரத் தளபதிகளுடைய பெயரால் தோரணவாயில்களும், வரவேற்பு வளைவுகளும் பாஞ்சாலங்குறிச்சியிலே அமைக்கப்பட்டன.

ஒரு மாவீரனுடைய பெருமையைப் போற்றுகின்ற நேரத்தில், நினைவைப் போற்றுகின்ற நேரத்தில் அவனுடைய வழித்தோன்றல்கள், வாரிசுகள் வாடிக் கொண்டிருப்பது அந்த மாவீரனுக்குச் செய்கின்ற பெருமை ஆகாது என்ற எண்ணத்தில் கட்டபொம்மனுடைய வழித்தோன்றல்கள் இருநூறு பேர்களுக்குப் பாஞ்சாலங்குறிச்சியிலேயே இருநூறு வீடுகள் கட்டித் தந்து அதையும் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சியும் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை திறப்புவிழா நிகழ்ச்சியோடு நடைபெற்றது.

அவர்களுக்குத் தேவையான நிலங்கள், வீடுகள், தண்ணீர் வசதி ஆகிய எல்லா அடிப்படை வசதிகளும் கட்டபொம்மனின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பட்டன. அந்த நிகழ்ச்சியிலே நான் கலந்துகொண்ட பிறகு தம்பி வைகோ அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல் கட்டபொம்மனுடைய நினைவை தொடர்ந்து நாம் போற்றிட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் ஆண்டுதோறும் பாஞ்சாலங்குறிச்சியிலே விழா எடுக்கப்பட்டு இப்போதும் அது தொடர்ந்து வருகிறது.

இங்கே நம்முடைய செவாலியர் சிவாஜி அவர்கள் பேசும்போது தான் கோரிக்கை வைத்தால் அதை கலைஞர் நிறைவேற்றியே தீருவார், நிறைவேற்றக் கூடிய கோரிக்கைகளைத்தான் வைப்பேன் என்று குறிப்பிட்டு அவர் விடுத்த வேண்டுகோளை ஒரு அருமைச் சகோதரருடைய அன்புக் கட்டளையாக நான் ஏற்றுக்கொண்டு இன்றைக்கு இந்த விழாவை அரசின் சார்பில் நடத்திக் கொண்டிருக்கிறோம்.


இன்னொரு கோரிக்கை என்று சொல்லி கயத்தாற்றிலே கட்டபொம்மனுடைய சிலை, சிவாஜி அவர்களால் வைக்கப்பட்ட சிலை இருக்கின்ற அந்த இடத்தைச் சுற்றியுள்ள நிலப்பகுதியை அரசாங்கத்திடம் ஒப்படைக்கிறேன் என்று தந்தார். பெற்றுக் கொண்டேன். இப்படிப்பட்டக் கோரிக்கைகள் நிறைய வருமேயானால் அதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வேன் என்பதை சிவாஜி அவர்களுக்கும் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருப்பவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோரிக்கைகள் இந்த வடிவிலே வருவது நாட்டிற்கும் நல்லது; அரசிற்கும் கூட! நான் அவருக்குச் சொல்லிக் கொள்வேன் வறண்டு காட்சி தருகின்ற அந்த இடத்தில் சிவாஜி எழுப்பியிருக்கின்ற அந்த நீண்டு உயர்ந்த கம்பத்தின் உச்சியில்

அமைந்திருக்கின்ற கட்டபொம்மன் சிலைக்கு மேலும் அழகூட்டுகின்ற வகையில் அவர் தந்துள்ள அந்த இடத்தில் ஒரு அழகான பூஞ்சோலை அமைக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

**பாழடைந்துபோன தமிழகத்தையே புதுப்பித்துக் கொண்டிருக்கிறோம்**

தம்பி வைகோ ஒன்றைக்குறிப்பிட்டார். கட்டபொம்மன் தூக்கிலே இடப்படுவதற்கு முதல் நாள் அடைத்து வைக்கப்பட்டிருந்த அந்த இடம் பாழடைந்து கிடக்கிறது; அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். பாழடைந்து போன தமிழகத்தையே புதுப்பித்துக் கொண்டிருக்கிறோம், எனவே தம்பி கவலைப்பட வேண்டாம், நிச்சயமாக அந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்திய நாட்டில் வெள்ளையனை எதிர்த்து வீரப் போரிட்டவர்கள் கட்டபொம்மன் மாத்திரமல்ல, கட்டபொம்மனுக்கு முன்பே பூலித்தேவன் போன்ற மாவீரர்கள் தோன்றி வெள்ளையரை எதிர்த்திருக்கிறார்கள். 1799ஆம் ஆண்டு கட்டபொம்மன் தூக்கிலே இடப்பட்டான் என்றால், அவன் அரசுப் பொறுப்புக்கு வந்து ஒன்பது ஆண்டு காலம் ஆன நிலையிலேதான் 39 வயதிலே தூக்கிலே இடப்பட்டான். அந்த வாலிப வயதில் கட்டபொம்மன் தூக்கிலே இடப்பட்டான் என்றால், அதற்கு முன்பே பூலித்தேவனுடைய கோட்டை, நெற்கட்டும் செவல் என்னும் ஊரிலே உள்ள கோட்டை வெள்ளைக்காரத் தளபதி கர்னல் ஹிரான் என்பவனால் தாக்கப்பட்டது. பூலித்தேவன் கொல்லப்பட்டாரா? அல்லது சிறைபடுத்தப்பட்டாரா? அல்லது வெள்ளைக்காரர்களால் பிடிக்க முடியாமலே மாயமாய் மறைந்தாரா என்பது இன்னமும் சரித்திரம் எழுப்பிக் கொண்டிருக்கின்ற மிக முக்கியமான வினாவாகும். அந்த வினாவிற்கு விடை இன்னமும் கிடைத்தபாடில்லை. அத்தகைய வீரராக பூலித்தேவன் அன்றைக்கு விளங்கினார்.

**தற்கொலைப் படையின் தளபதியாகயிருந்து தன்னையே தியாகம் செய்த சுந்தரலிங்கம்**

இங்கே தம்பி வைகோ குறிப்பிட்டதைப் போல் கட்டபொம்மன் படை நடத்தி பரங்கியரை எதிர்த்த அந்தக் காலக் கட்டத்தில் ஒருபுறத்தில் வெள்ளையத்தேவன், இன்னொரு புறத்தில் சுந்தரலிங்கம் – நான் பெயர்களை மாத்திரம் குறிப்பிடுகிறேன். அவர்கள் யார் என்பதை நீங்கள் அறிவீர்கள். இரண்டு தளபதிகள் – வெள்ளையத் தேவன் கட்டபொம்மனோடு இருந்து பரங்கியரை எதிர்த்து உயிர் நீத்தவன். அதைப் போலவே தற்கொலைப் படையின் தளபதியாக இருந்து தன்னுடைய தலைவனுக்காக, தன்னுடைய மக்களுக்காக பெரும் தியாகத்தைச் செய்து குண்டுகள் பதுக்கப்பட்டிருந்த இடத்தில் குதித்து தானும் மாண்டு அந்தக்

குண்டுகளையும் அழித்து தன்னுடைய வீரர்களையெல்லாம் காப்பாற்றி தன்னை தியாகம் செய்து கொண்டவன் சுந்தரலிங்கம்

அந்த இருவரும் கட்டபொம்மனுடைய வலக்கரம், இடக்கரமாக இருந்தார்கள். யார் வலக்கரம், யார் இடக்கரம் என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் அதிலே கூட இன்றைக்கு வேறுபாடு கண்டு தகராறுகளைக் கிளப்பக் கூடியவர்கள் இருப்பார்கள் என்பதால் அதைக்கூட நான் சொல்ல தயாராக இல்லை. இருவரிலே ஒருவர் வலக்கரம், இன்னொருவர் இடக்கரம் என்ற வகையிலே இருவரும் இரு கரங்களாக இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு வெள்ளையத்தேவனும் சுந்தரலிங்கமும் நாட்டு மக்களுக்கு, நாட்டிற்கு, சமுதாயத்திற்கு வலக்கரம், இடக்கரமாக இருக்கிறார்களா என்றால் இல்லை என்பதைத் தான் வருத்தத்தோடு தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

நான் "ஒரே ரத்தம்" என்ற ஒரு குறுநாவல் எழுதினேன். அது திரைப்படமாகக் கூட எடுக்கப்பட்டது. அதிலே ஒரு இடத்திலே ஒரு உரையாடல். பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் ஒருவரோடொருவர் மோதிக் கொண்டு சாகின்ற காட்சியைக் கண்டு அதிலே வருகின்ற கதாநாயகன் சொல்லுவான் – "ஒரு காலத்தில், சரித்திரக் காலத்தில், புராணக் காலத்தில் புலியும் மானும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்தன என்று பெருமையோடு சொல்லுவார்கள். இன்றைக்குப் புலியும் மானும் கூட ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாம், மானும் மானுமாவது ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாமா?" என்று அந்தக் கதாநாயகன் கண்ணீர் பொங்கக் கேட்பான்.




இன்றைக்கும் அதைத்தான் நாம் கேட்க வேண்டிய நிலைமை நாட்டிலே இருக்கின்றது என்பதை மிகுந்த வேதனையோடு நான் சொல்லி கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இது ஒரு வீரனுடைய புகழ் பாட நடத்தப்படுகின்ற நிகழ்ச்சி மாத்திரமல்ல. அவனுடைய பெருமைகளைச் சொல்ல நடத்தப்படுகின்ற நிகழ்ச்சி மாத்திரமல்ல, அதைச் சொல்லுகின்ற காரணத்தால், நினைவூட்டுகின்ற காரணத்தால் இளைய தலைமுறை, வருங்காலச் சமுதாயம், வீர உணர்வோடு மான உணர்வோடு வாழ வேண்டும் என்பதை பாடமாக நடத்துவதற்காகவும் இந்த நிகழ்ச்சியை இங்கே நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது.

**சமுதாயங்களிலே ஒற்றுமையை நிலை நாட்டவே இந்த நிகழ்ச்சி**

சாதி, பேதமற்ற சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடிய வகையில் 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டபொம்மனும், வெள்ளையத்தேவனும், சுந்தரலிங்கமும் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். அதை மறவாமல் இந்தச் சமுதாயங்களிலே நாம் ஒற்றுமையை நிலைநாட்டி நம்முடைய எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்க வேண்டும் என்பதற்காகவும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகின்றது என்பதை தயவு செய்து யாரும் மறந்து விடக்கூடாது.

இப்படி ஒரு நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டுமென்ற நினைவை எனக்கு ஊட்டியவர் என்னுடைய ஆருயிர் சகோதரர் செவாலியர் நடிகர் திலகம் சிவாஜி ஆவார்கள். முத்தமிழ்ப் பேரவை நிகழ்ச்சி ஒன்றிலே கலந்து கொண்ட போது இந்தக் கோரிக்கையை அவர் வைத்தார். கட்டபொம்மன் தூக்கில் இடப்பட்ட 200ஆவது ஆண்டு நிறைவை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நான் அந்த

அறிவிப்பை உடனடியாகச் செய்யாவிட்டாலும் அடுத்து நான் படித்த நிதிநிலை அறிக்கையிலே(Budget) இதை அறிவித்தேன். “கட்டபொம்மனுடைய 200ஆவது ஆண்டு நினைவு போற்றுகின்ற புகழாஞ்சலி நாள் அக்டோபர் 16–ஆம் தேதி இந்த ஆண்டு கொண்டாடப்படும்” என்று அறிவித்தேன்.

**2001 – அக்டோபர் மாதத்தில் மருதுபாண்டியர் நிகழ்ச்சி**

அடுத்து, கட்டபொம்மனைப் போலவே வெள்ளையரை எதிர்த்துப் போரிட்டு வீர மரணமடைந்த மருதுபாண்டியர்களின் நிகழ்ச்சியை அந்த அரசின் சார்பாக நாம் நடத்துவோம் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன். 2001ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அந்த நிகழ்ச்சி நடைபெறும். 2001ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிகழ்ச்சியா என்று யாரும் ஆச்சரியப்பட வேண்டாம். ஆமாம், 2001ஆம் ஆண்டு அக்டோபரில் மருதுபாண்டியரின் 200ஆவது ஆண்டு நினைவு போற்றுகின்ற நிகழ்ச்சியை இந்த அரசே நடத்தும்; நாமே முன்னின்று நடத்துவோம் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டபொம்மனுடைய வீர, தீர, பராக்கிரமங்களைப் பற்றியெல்லாம் என்னுடைய தம்பி வைகோ இங்கே வெகுவிளக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறார். கட்டபொம்மனே இங்கே திரும்பி வந்து இந்த மேடையில் நின்று பேசினால் எப்படி இருக்குமோ அதே காட்சியை மீண்டும் நினைவூட்டுகின்ற வகையிலே வைகோ இங்கே உரை நிகழ்த்தியிருக்கிறார்.

கட்டபொம்மன் எப்படி இருப்பான் என்பதைப் பற்றி இங்கே நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் கேட்டு, நாம் கட்டபொம்மனைப் பார்த்ததில்லை. சிவாஜியைத்தான் கட்டபொம்மனாக பார்த்திருக்கிறோம் என்று சொன்னார். ஆமாம், கட்டபொம்மன் எப்படி இருப்பான் என்றால் சிவாஜியைப் போல இருப்பான். சிவாஜி எப்படி இருப்பான் என்று கேட்டால் அவனும் சிவாஜியைப் போலத்தான் இருப்பான். சாக்ரடீஸ் எப்படி இருப்பார் என்று கேட்டால் சிவாஜியைப் போல சாக்ரடீஸ் இருப்பார். சேரன் செங்குட்டுவன் எப்படி இருப்பான் என்று கேட்டால் சிவாஜியைப் போலத்தான் இருப்பான். இப்படி பழைய வரலாற்று நாயகர்களையெல்லாம் நமக்கு நினைவூட்டுகின்ற வகையிலே பல்துறை நடிப்பால், ஆற்றலால், யாரும் மிஞ்ச முடியாத அளவிற்கு உலகப் புகழ்பெற்ற அந்தக் கலைத்திறனை நிலைநாட்டியிருக்கின்ற என்னுடைய அருமைச் சகோதரர் சிவாஜியின் வேண்டுகோள் இன்றைக்கு நிறைவேறியிருக்கின்றது.

ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். வெறும் கோட்டை கட்டுவது, நினைவகங்கள் ஏற்படுத்துவது என்பது மாத்திரம் அல்ல இந்த அரசின் இலட்சியம்.

பூம்புகார் பற்றி வைகோ குறிப்பிட்டார். பூம்புகார் எழுநிலைமாடம் பூம்புகாரிலே உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதை உருவாக்கிய அதே நேரத்தில், அழகான ஒரு மண்டபத்தையும் மாடத்தையும் மாத்திரம் எழுப்பினால் போதாது என்பதற்காக அங்கு வாழும் மீனவர்களுக்காக இல்லங்களை அங்கே கட்டித்தந்து அவர்கள் வாழ வசதியையும் இந்த அரசு அப்போதே செய்து கொடுத்திருக்கிறது. அவர்களுடைய பிழைப்பிற்காக, தொழிலுக்காக படகுகளையும் அப்போதே வாங்கித் தந்தது தான் இந்த அரசு.

எனவே எந்த வீரர்களாக இருந்தாலும், எந்த வரலாற்று நாயகர்களாக இருந்தாலும் அவர்களுடைய புகழைப் பரப்புகின்ற அதே நேரத்தில் அவர்களை நம்பியிருக்கின்ற, நம்பி வாழ்ந்த, அவர்கள் மறைந்த பிறகு இந்தக் காலத்திலும் அவர்கள் நினைவோடு இருந்து கொண்டிருக்கின்ற ஏழையெளிய மக்கள், அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கெல்லாம் வழி பிறக்க பல சாதனைகளைப் புரிந்த அரசு இந்த அரசு என்பதையும் உங்களுக்கு எடுத்துக்கூறி இந்த நாளில் நம்முடைய சிவாஜி அவர்களின் வேண்டுகோள் நிறைவேறியதிலே ஒரு மகிழ்ச்சி; அதைப்போலவே தம்பி வைகோ சொன்ன கட்டபொம்மன் சிறையிலே அடைக்கப்பட்டிருந்த அந்த இடத்தை மீண்டும் புதுப்பித்து ஏற்கெனவே இருந்த வடிவம் மாறாமல் வரலாற்றுச் சின்னமாக ஆக்குகின்ற அந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதி இவைகள் இந்த நிகழ்ச்சியினுடைய வெளிப்பாடுகளாக இருக்கட்டும் என்று கூறி வாழ்க வீரபாண்டிய கட்டபொம்மனின் புகழ், என்றென்றும் வாழ்க, அவன் காத்து வளர்த்த வீரம் வாழ்க, அவன் போற்றிய மானம் வாழ்க, அவன் வாழ்ந்த தமிழகம் வாழ்க! வாழ்க!! வாழ்க!!! என்று கூறி விடைபெறுகிறேன்.

***– வீரபாண்டிய கட்டபொம்மன் அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில் 16–10–99 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.*** ★

# போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் முதல்வர் கலைஞர் துவக்கி வைத்தார்

இந்தியா முழுவதும் இளம்பிள்ளை வாதத்தை 2000-ம் ஆண்டிற்குள் முற்றிலுமாக ஒழித்திடும் நோக்குடன் சிறப்புப் போலியோ சொட்டு மருந்து முகாம் 4 கட்டங்களாக நாடெங்கும் நடைபெறுகிறது.

தமிழகத்தில் முற்றிலுமாக இளம்பிள்ளை வாதத்தை ஒழித்திடும் நோக்குடன் முதல்கட்டமாக சிறப்பு போலியோ சொட்டு மருந்து வழங்கும் நிகழ்ச்சி திருவல்லிக்கேணியில் கஸ்தூரிபா காந்தி அரசு மருத்துவமனையில் 24-10-99 அன்று காலை 10 மணியளவில் நடைபெற்றது.

இதில் முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு சொட்டு மருந்து வழங்கி முகாமை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு வீராசாமி, சென்னை மாநகர மேயர் திரு. மு.க. ஸ்டாலின், பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் அய்யாதுரை, மருத்துவமனை கண்காணிப்பாளர் தேவகி மற்றும் ஜானகி, மருத்துவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஏராளமான தாய்மார்கள் நீண்ட வரிசையில் நின்று தங்கள் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து இட்டுச் சென்றனர்.

போலியோ சொட்டு மருந்து இவ்வாண்டு 70 இலட்சம் குழந்தைகளுக்கு இடுவது என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும், சென்ற ஆண்டு இரண்டு கட்டங்களாக நடைபெற்ற சிறப்பு போலியோ சொட்டு மருந்து முகாம் இவ்வாண்டு நான்கு கட்டங்களாக நடைபெறுகிறது. குக் கிராமங்களில் வீடுவீடாக சென்று சொட்டு மருந்து இடுவதற்கு பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இதற்காக நாடு முழுவதும் 2 இலட்சம் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்றும் போலியோ சொட்டு மருந்து இடப்பட்ட குழந்தைகளின் விரலில் முத்திரை போன்று குறி இடப்படுகிறது என்றும் 2000 ஆண்டுக்குள் இளம்பிள்ளை வாதம் எனும் இக்கொடிய நோயை ஒழித்துவிட அரசு முனைப்பாக செயல்படுகிறது என்றும் மருத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

★ ★ ★


## போலியோ நோய் ஒழிப்பு தீவிரத் திட்டம்

### சொட்டு மருந்து சிறப்பு முகாம்

5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும்,
ஏற்கெனவே சொட்டு மருந்து கொடுத்திருந்தாலும்
**நான்கு தவணைகளில்**
மீண்டும் போலியோ சொட்டு மருந்து கொடுக்க வேண்டும்
அருகிலுள்ள போலியோ சொட்டு மருந்து மையங்கள்,
அரசு மருத்துவமனைகள் அல்லது தனியார்
மருத்துவமனைகளுக்குச்
சென்று குழந்தைகளுக்கு தவறாமல் இலவச
சொட்டு மருந்து போட்டுக் கொள்வீர்!

**சொட்டு மருந்து கொடுப்போம்.**
**போலியோ நோயை ஒழிப்போம்.**

| | |
|---|---|
| முதல் தவணை<br>24, அக்டோபர் (ஞாயிறு) | இரண்டாம் தவணை<br>21, நவம்பர் (ஞாயிறு) |
| மூன்றாவது தவணை<br>19, டிசம்பர் (ஞாயிறு) | நான்காவது தவணை<br>23, ஜனவரி (ஞாயிறு) |

# 1999 நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் சட்டமன்றத் தொகுதி வாரியாக

## 1. வட சென்னை

| வேட்பாளரின் பெயர் | கட்சி | ராயபுரம் | துறை முகம் | டாக்டர் ராதா கிருஷ்ணன் நகர் | பெரம்பூர் | திருவொற் றியூர் | வில்லி வாக்கம் | அஞ்சல் வாக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சி. குப்புசாமி | திமுக | 37878 | 30985 | 56215 | 67785 | 98063 | 1[illegible]0159 | 16 | 471101 |
| ஜே.எம்.ஆரூண் ரசீத் | தமாகா | 7064 | 9595 | 10011 | 12653 | 15780 | 26087 | 2 | 81192 |
| ஏ. சவுந்தரராஜன் | இ.கம்யூ(மா) | 28342 | 17636 | 48908 | 47407 | 72844 | 96173 | 2 | 311312 |
| எஸ். குமாரசாமி | இ.கம்.(மா.லெ) | 64 | 70 | 139 | 198 | 398 | 1452 | 0 | 2321 |
| ஜஸ்டிஸ் வி. ராமசாமி | அதிமுக | 41906 | 38765 | 56510 | 35774 | 41535 | 36501 | 57 | 251048 |
| ஏ.சி. சீனிசாமி தேவர் | அஇபாபி | 1429 | 548 | 880 | 379 | 406 | 685 | 3 | 4330 |
| ஐ. ராமசாமி | சுயே | 98 | 61 | 59 | 73 | 55 | 32 | 0 | 378 |
| வி. கண்ணன் | சுயே | 48 | 35 | 30 | 64 | 30 | 27 | 0 | 234 |
| கே. கணேசன் | சுயே | 45 | 42 | 36 | 35 | 34 | 32 | 0 | 224 |
| என். குணசேகரன் | சுயே | 34 | 21 | 37 | 30 | 20 | 21 | 0 | 163 |
| பி. சகாதேவன் | சுயே | 94 | 66 | 79 | 70 | 72 | 73 | 0 | 454 |
| வி. சீனிவாசகன் | சுயே | 194 | 134 | 152 | 133 | 164 | 167 | 0 | 944 |
| கே.சுப்புகாளை | சுயே | 130 | 98 | 132 | 103 | 102 | 104 | 0 | 669 |
| ஏ. சோமசுந்தரம் | சுயே | 2690 | 928 | 550 | 163 | 286 | 43 | 0 | 4660 |
| ஆர். தாமரைக்கனி | சுயே | 3371 | 2170 | 2684 | 18112 | 8866 | 1755 | 19 | 36977 |
| பி.டி. தியாகராஜன் (எ) யோககண்ணன் | சுயே | 134 | 67 | 86 | 102 | 75 | 36 | 0 | 500 |
| எம். மன்மதன் | சுயே | 24 | 25 | 30 | 26 | 32 | 17 | 0 | 154 |
| கே. முத்துபாண்டியன் | சுயே | 20 | 18 | 11 | 20 | 6 | 8 | 0 | 83 |
| மொத்தம் | | 132968 | 117009 | 159303 | 124115 | 134733 | 110658 | 678 | 779464 |

★ மொத்த வாக்காளர் : 12,57,935 ★ பதிவான வாக்குகள் : 7,90,752 ★ செல்லாதவை : 11,288

## 36. திருநெல்வேலி

| வேட்பாளரின் பெயர் | கட்சி | விளாத்திக் குளம் | ஒட்டப் பிடாரம் | திருநெல் வேலி | பாளையங் கோட்டை | ஸ்ரீவை குண்டம் | தூத்துக் குடி | அஞ்சல் வாக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பி.எச்.பாண்டியன் | அதிமுக | 37396 | 30990 | 41327 | 42963 | 34217 | 62970 | 112 | 249975 |
| பி. கீதா ஜீவன் | திமுக | 32345 | 25875 | 41460 | 40674 | 25793 | 57005 | 329 | 223481 |
| எம். சேதுராமபாண்டியன் | அஇபாபி | 199 | 781 | 1778 | 646 | 187 | 319 | 3 | 3913 |
| பி.வி. பக்தவத்சலம் | புத | 12929 | 36181 | 19608 | 18715 | 17646 | 7811 | 51 | 112941 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| என். சந்திரபிரகாஷ் | சுயே | 53 | 62 | 43 | 87 | 56 | 58 | 0 | 359 |
| சி. சரவணன் | சுயே | 33 | 42 | 27 | 40 | 24 | 41 | 0 | 207 |
| ஜே.டி. சாக்ரேட்ஸ் | சுயே | 67 | 79 | 293 | 737 | 818 | 294 | 0 | 2288 |
| எஸ். சுந்தரராஜன் | சுயே | 330 | 376 | 556 | 488 | 347 | 435 | 2 | 2534 |
| டி. சுயம்புலிங்கம் | சுயே | 297 | 379 | 457 | 440 | 384 | 506 | 0 | 2463 |
| எம். தருமசீலன் | சுயே | 25 | 29 | 44 | 41 | 22 | 81 | 0 | 242 |
| முகமது சேக் இப்ராஹிம் | சுயே | 67 | 62 | 178 | 312 | 99 | 145 | 1 | 864 |
| கே. லஷ்மணன் | சுயே | 54 | 83 | 144 | 123 | 82 | 68 | 0 | 554 |
| பி. அரிகிருஷ்ணன் | சுயே | 24 | 133 | 68 | 111 | 130 | 266 | 1 | 733 |
| மொத்தம் | | 83819 | 95072 | 105983 | 105377 | 79805 | 129999 | 499 | 600554 |

★ மொத்த வாக்காளர் : 11,21,877 ★ பதிவான வாக்குகள் : 6,10,090 ★ செல்லாதவை : 9,536

## 37. தென்காசி (தனி)

| வேட்பாளரின் பெயர் | கட்சி | சங்கரன் கோவில் (தனி) | வாசுதேவ நல்லூர் (தனி) | கடைய நல்லூர் | தென் காசி | ஆலங் குளம் | அம்பா சமுத்திரம் | அஞ்சல் வாக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எஸ். முருகேசன் | அதிமுக | 43873 | 40116 | 42597 | 40023 | 44213 | 28302 | 117 | 239241 |
| எஸ். ஆறுமுகம் | பாஜக | 40235 | 30311 | 35461 | 52100 | 39987 | 39657 | 603 | 238354 |
| டாக்டர் கே. கிருஷ்ணசாமி | புத | 38381 | 39688 | 33038 | 23268 | 33154 | 18552 | 139 | 186220 |
| ஆர். சண்முகசுந்தராஜ் | சுயே | 97 | 138 | 90 | 136 | 135 | 97 | 2 | 695 |
| டி. பாலமுருகன் | சுயே | 411 | 401 | 412 | 350 | 501 | 240 | 1 | 2316 |
| மொத்தம் | | 122997 | 110654 | 111598 | 115877 | 117990 | 86848 | 862 | 666826 |

★ மொத்த வாக்காளர் : 10,44,090 ★ பதிவான வாக்குகள் : 6,77,205 ★ செல்லாதவை : 10,379

## 38. திருச்செந்தூர்

| வேட்பாளரின் பெயர் | கட்சி | சேரன் மாதேவி | நாங்கு நேரி | ராதா புரம் | சாத்தாங் குளம் | திருச் செந் தூர் | கன்னியா குமரி | அஞ்சல் வாக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஏ.டி.கே. ஜெயசீலன் | திமுக | 36588 | 36331 | 43960 | 28325 | 41373 | 50633 | 420 | 232630 |
| ஆர். தனுஷ்கோடி ஆதித்தன் | தமாகா | 18855 | 21622 | 18271 | 21040 | 13985 | 15159 | 103 | 109035 |
| டாக்டர் பி.பி. ராஜன் | அதிமுக | 34603 | 27433 | 26517 | 23588 | 33877 | 31907 | 39 | 177964 |
| பி. குமார் | சுயே | 148 | 138 | 174 | 109 | 112 | 169 | 0 | 850 |
| ஆர். செந்தில்வேல் முருகன் | சுயே | 240 | 182 | 111 | 150 | 78 | 79 | 2 | 842 |
| எஸ். [illegible]வதாசன் ராஜா | சுயே | 101 | 78 | 88 | 58 | 41 | 62 | 0 | 428 |
| எஸ். வைலோ செல்வி நாடார் | சுயே | 2397 | 1791 | 913 | 2560 | 594 | 64 | 4 | 8323 |
| மொத்தம் | | 92932 | 87575 | 90034 | 75830 | 90060 | 98073 | 568 | 535072 |

★ மொத்த வாக்காளர் : 10,40,627 ★ பதிவான வாக்குகள் : 5,43,932 ★ செல்லாதவை : 8,860

## 39. நாகர்கோவில்

| வேட்பாளரின் பெயர் | கட்சி | நாகர் கோவில் | கொளச் சல் | பத்ம நாப புரம் | திருவட் டார் | விலவன் கோடு | கிள்ளி யூர் | அஞ்சல் வாக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பி. ராதாகிருஷ்ணன் | பாஜக | 76897 | 59923 | 47779 | 40362 | 38836 | 42943 | 579 | 307319 |
| டாக்டர் குமாரதாஸ் | தமாகா | 15556 | 21780 | 21864 | 27761 | 24744 | 27075 | 250 | 139030 |
| என்.டென்னிஸ் | இதேகா | 26699 | 20495 | 22371 | 28875 | 46070 | 16966 | 200 | 161676 |
| வி. அப்பு | சுயே | 39 | 46 | 27 | 348 | 61 | 55 | 0 | 576 |
| ஏ. அய்யப்பன் | சுயே | 34 | 32 | 27 | 74 | 76 | 35 | 0 | 278 |
| எம். பாபு | சுயே | 243 | 308 | 285 | 296 | 266 | 309 | 0 | 1707 |
| என். முருகன் | சுயே | 33 | 24 | 38 | 64 | 39 | 29 | 0 | 227 |
| ரேமா ஜனார்தனன் நாயர் | சுயே | 50 | 39 | 56 | 395 | 147 | 306 | 1 | 994 |
| பி. ஜோசப் | சுயே | 31 | 30 | 32 | 100 | 47 | 45 | 3 | 288 |
| மொத்தம் | | 119582 | 102677 | 92479 | 98275 | 110286 | 87763 | 1033 | 612095 |

★ மொத்த வாக்காளர் : 10,57,712 ★ பதிவான வாக்குகள் : 6,21,397 ★ செல்லாதவை : 9,302

# மட்சூசிடா குளிர்சாதன பெட்டி தொழிற்சாலை

மட்சூசிடா ஏர்கண்டிசனிங் இண்டியா லிமிடெட் நிறுவனம் தனது தொழிற்சாலையைத் தமிழகத்தில் நிறுவி இருப்பதை எண்ணி நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். மட்சூசிடா எலக்ட்ரிக் இண்டஸ்ரியல் கம்பெனி மற்றும் ஸ்ரீ தூத்டிரேடிங் ஏஜென்சீஸ் ஆகியவை இணைந்து இந்த நிறுவனத்தைத் துவங்கியுள்ளன. இத்தொழிற்சாலை இங்கு அமைவதால், இந்த சிப்காட் வளாகம் மேலும் பொலிவு பெறுகிறது என்பதை அறிவிப்பதில் நான் பெருமிதம் அடைகிறேன்.

**முதலீட்டாளர்களை விரைந்து கவரும் மாநிலம் தமிழகம்**

இந்த தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் கடந்த 1997ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் செய்து கொள்ளப்பட்டது.

ஒப்பந்தம் செய்துகொண்ட 2 ஆண்டுகளுக்குப் பின் இந்த தொழிற்சாலை துவக்கப்படுகிறது. இருப்பினும், இந்த தொழிற்சாலை தனது உற்பத்தியைக் கடந்த ஜனவரி மாதமே துவங்கி விட்டது என்று எனக்குத் தெரிவித்துள் ளனர். அது ஒரு சாதனை நேரம்தான். இந்த இலட்சியத்தை எய்துவதற்குரிய காரணகர்த்தாக்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஏர்–கண்டிஷன் உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம் புகுத்தப்பட்டுள்ளது குறித்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

குளிர்பதன கருவிகள் சந்தையில் 'நேஷனல்' என்பது ஒரு மகத்தான பெயர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதேபோல் மின்னணு மற்றும் மின்சார உலகில் 'மட்சூசிடா' என்ற ஜப்பான் நிறுவனத்தின் பெயரும் சிறந்து விளங்குவதை எவரும் மறுக்க முடியாது.

முதலீட்டாளர்களை விரைந்து கவரும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. பல பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்கெனவே தமிழகத்தில் முதலீடு செய்துள்ளன. இந்த வரிசையில் தற்போது மட்சூசிடா நிறுவனமும் தமிழ்நாட்டில் சேர்ந்துள்ளது என்பதால் நான் மகிழ்வடைகிறேன். உங்கள் எல்லோருக்கும் என் இனிய நல்வாழ்த்துக்கள். நன்றி!

இவ்வாறு முதல்வர் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து முதல்வர் தமிழில் நிகழ்த்திய உரை வருமாறு:

இந்த நல்ல இனிய விழாவில் நம்முடைய தமிழக அரசின் தொழிற்துறை செயலாளர் குறிப்பிட்டதைப் போல, சென்னையிலிருந்து பெங்களூர் செல்கின்ற சாலையில் இருமருங்கிலும் இதுபோன்ற தொழிற்சாலைகளை நிறுவி, அதனை அழகு பார்க்க வேண்டும், அதனுடைய பயனை தமிழக மக்கள் துய்த்திட வேண்டுமென்ற பேரவா எனக்கும், என் தலைமையிலே உள்ள இந்த அரசுக்கும் உண்டு என்பதை பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இருங்காட்டுக்கோட்டையில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த ஏர்–கண்டிஷன் நிறுவனம் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஒரு பெரிய நிறுவனத்தின் பிரிவாகும் என்பதை முன்னால் பேசியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியிருக் கிறார்கள். இந்த நிறுவனத்தோடு இந்தியாவினுடைய ஸ்ரீ தூத் டிரேடிங் ஏஜென்சீஸ் நிறுவனமும் ஒரு கூட்டு முயற்சியிலே சேர்ந்து உருவாக்கியுள்ள புதிய நிறுவனமாக இது இங்கே விளங்கிக் கொண்டிருக்கின்றது.

கூட்டு முயற்சிகள், கூட்டணிகள் இவைகள் எல்லாம் இன்றைக்கு இந்தியாவிலே வரவேற்கப்படுகின்ற காலம் இந்தக் காலம் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். எதிலும் தனியாக நின்று ஒன்றைச் செய்வதைவிட கூட்டாக நின்று ஒரு காரியத்தைச் செய்யும்போது எப்படி அதிகாரங்கள் பரவலாக வேண்டுமென்று கருதுகிறோமோ அதைப் போல உழைப்பும் பொறுப்பும் பரவலாக ஆக்கப்பட்டு அனைவரும் சேர்ந்து ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற அளவிலே இந்த முயற்சி இன்றைக்கு உருவாகியிருப்பதாக நான் கருதுகிறேன்.

நேஷனல் என்கிற பழமைவாய்ந்த தொழில் நிறுவனத்தின் முத்திரையோடு இந்த வளாகத்தில்



இது உருவாக்கப்பட்டுள்ளது. 1997ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இந்த நிறுவனத்தை தமிழகத்திலே உருவாக்குவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து இந்த நிறுவனத்திற்காக தமிழக அரசினால் 20 ஏக்கர் நிலம் இந்த சிப்காட் தொழில் வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. நான் முதலில் என்னுடைய ஆங்கில உரையிலே குறிப்பிட்டதைப் போல 1999 சனவரித் திங்களிலேயே இத்தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் நிலையை எய்திய போதிலும், இத்தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடிந்து முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையின் திட்ட முதலீடு ரூ.60 கோடி.

இலட்சக்கணக்கான கோடி ரூபாய் முதலீடு செய்து பல இடங்களிலே இந்த நிறுவனத்தை விரிவாக்கிக் கொண்டிருப்பவர்கள் இப்போது அறுபது கோடி ரூபாய்தான் இங்கே ஒரு தொழிலுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று ஸ்ரீனிவாசன் அவர்கள் குறைப்பட்டுக் கொண்டு தொடர்ந்து இன்னும் பல கோடிகளைத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். அவர் தொழில் துறையின் செயலாளர் என்ற முறையிலே கேட்டுக் கொண்டார். நான் தொழில் துறைக்கும் பொறுப்புள்ள முதலமைச்சர் என்ற முறையில் நானும் இவர்களை மாத்திரமல்ல மற்ற தொழில்துறை அதிபர்களையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தயாரிக்கப்படும் ஏர்–கண்டிஷனர்களுக்கு 5 ஆண்டுகள் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கின்றது. எப்படி ஒரு ஆட்சிக்கு ஐந்தாண்டு காலம் உத்தரவாதம் வேண்டுமென்கின்ற கருத்து இன்றைக்கு நாட்டிலே ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கின்றதோ அதைப்போல இந்த ஏர்–கண்டிஷன்களுக்கு ஐந்தாண்டு கால உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கின்றது.

இத்தொழிற்சாலையில் 250 தொழிலாளர்கள் நேரடி வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பதும் சுமார் 300 பேர் மறைமுக வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர் என்பதும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

### 12 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன

இந்த இருங்காட்டுக்கோட்டை' பகுதியைப் பொறுத்தவரை 1842 ஏக்கர் பரப்பில் இந்த அரசினால் சிப்காட் தொழில் வளாகம் உருவாக்கப்பட்டு 1998–ஆம் ஆண்டு பத்தாவது மாதம் ஏழாம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டது. இதுவரை அதாவது 30.9.1999 வரை மொத்தம் 32 தொழில் நிறுவனங்களுக்குத் தொழில் மனைகள் இந்த வளாகத்திலே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 12 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன என்பதை பெருமையோடும் மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவைகள்–

- ★ 536 ஏக்கர் பரப்பில், 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் ஹூண்டாய் மோட்டார் நிறுவனம்.
- ★ 20 ஏக்கர் பரப்பில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மட்சூசிடா ஏர்கண்டிஷனிங் இந்தியா நிறுவனம்.

★ ஏறத்தாழ ஐந்து ஏக்கர் பரப்பில், 8.6 கோடி ரூபாய் முதலீட்டில் லூமாக்ஸ் சாம்லிப் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஆட்டோமேட்டிவ் விளக்குகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

★ அடுத்து, ஏறத்தாழ பத்து ஏக்கர் பரப்பில் 45 கோடி ரூபாய் முதலீட்டில் ஜேபிஎம்சுங்வூ (JBM SUNGWOO) லிமிடெட் நிறுவனத்தின் உலோகத் தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை.

★ மேலும் பத்து ஏக்கர் பரப்பில், 40 கோடி ரூபாய் முதலீட்டில் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் இல்ஜின் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை.

★ இரண்டு ஏக்கர் பரப்பில், 17 கோடி ரூபாய் முதலீட்டில் கார் உதிரிபாகங்கள் தயாரிக்கும் ஜே.கே.எம். டெரீம் ஆட்டோமேட்டிவ் தொழிற்சாலை.

★ மூன்று ஏக்கர் பரப்பில், 23 கோடி ரூபாய் முதலீட்டில் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் டைனமேட்டிக் தொழில்நுட்பத் தொழிற்சாலை.

★ ஐந்து ஏக்கர் பரப்பில், 9 கோடி ரூபாய் முதலீட்டில் வாகன உதிரிபாகம் தயாரிக்கும் சார்தா மோட்டார் தொழிற்சாலை.

★ ஒன்பது ஏக்கர் பரப்பில், 30 கோடி ரூபாய் முதலீட்டில் வாகனங்களுக்கான பிரேக்குகள் தயாரிக்கும் மேண்டோ பிரேக் சிஸ்டம்ஸ் தொழிற்சாலை.

★ பத்து ஏக்கர் பரப்பில், 44 கோடி ரூபாய் முதலீட்டில் உலோகத்தகடு தயாரிக்கும் தொழிற்சாலை.

★ நான்கு ஏக்கர் பரப்பில், 9 கோடி ரூபாய் முதலீட்டில் கார் கதவுகளுக்கான பாகங்கள் தயாரிக்கும் பி.எச்.சி. உற்பத்தி தொழிற்சாலை.

★ பத்து ஏக்கர் பரப்பில், 43 கோடி ரூபாய் முதலீட்டில் உலோகத் தகடு பாகங்கள் தயாரிக்கும் டோங்கிவிஷன் தொழிற்சாலை.

ஆகிய 12 தொழிற்சாலைகள் 1996க்குப் பின் இத்தொழில் வளாகத்தில் மட்டும் திறக்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக் கொள்வேன்.

இவை தவிர 3 ஏக்கர் பரப்பில், பால்பாயிண்ட் பேனாக்களுக்கு உயர்தர உலோக எழுதுமுனைகள் தயாரிக்கும் ரைனால்டு பேனா தொழிற்சாலை; வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் கிரஸண்ட் ஆட்டோகாம்ப் தொழிற்சாலை கட்டுமானப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. இவையல்லாமல்,

20 ஏக்கர் பரப்பில் காகித தொழில் எந்திரங்கள் தயாரிக்கும் மார்க்குயுப் இண்டியா தொழிற்சாலை உட்பட மேலும் 18 தொழில் நிறுவனங்களுக்கு – இந்த இருங்காட்டுக்கோட்டை தொழில் வளாகத்தில் நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**இந்தியாவின் தொழில் மயமான மாநிலம் தமிழகம்**

தமிழகத்தைத் தொழில் மயமாக்கும் நோக்குடன், 1996இல் இந்த அரசு நான்காவது முறையாக மீண்டும் பொறுப்பேற்றவுடன் இந்தியாவின் தொழில் மயமான மாநிலம் தமிழ்நாடு என்ற பெருமையை மீண்டும் அடைய வேண்டுமென்ற நோக்கத்துடனும் இந்தியா மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாக, தமிழ்நாட்டை உருவாக்க வேண்டுமென்ற குறிக்கோளுடனும் தொழில் முனைவோர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடனும் தொழில் முதலீடுகளுக்குத் தடையை நீக்கி, விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்க வேண்டுமென்ற கருத்துடனும் சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்காத வகையில் முன்னேற்றப் பணிகளை முடுக்கி விட வேண்டுமென்கின்ற ஆர்வத்துடனும் ஒளிவு மறைவில்லாத முதலீட்டாளர்கள் விரும்பும் – தொழில் நட்புறவு நடைமுறையைப் பின்பற்ற (Transparency Approach - Industry - friendly Policy) வேண்டுமென்ற நோக்குடனும் ஒற்றைச் சாளர முறையில் (Single Window System) தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குவது என்ற அறிவிப்புடனும் மின் சக்தியை அதிக அளவில் உருவாக்கி, அதை நல்ல முறையில் பகிர்ந்தளித்தல் என்ற தன்மையுடனும் சாலைகளை மேம்படுத்துதல், நவீன தகவல் தொடர்பு வசதிகளை ஏற்படுத்துதல், புதிய துறைமுகங்களை உருவாக்குதல், இயங்கும் துறைமுகங்களை மேம்படுத்துதல், தொழில் பயிற்சி வசதிகளைச் செம்மைப்படுத்துதல், அகலவழி ரயில் பாதைப் பணிகளைத் துரிதப்படுத்துதல் – முதலியவற்றையெல்லாம் நோக்கமாகக் கொண்டு இந்த அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகளால் தமிழகத்தில் புதிய பல தொழிற்சாலைகள் தோன்றி – தொழில் வளம் பெருகி – அகில இந்திய அளவில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல இன்றைக்கு இந்தியாவிலே தமிழ்நாடு ஏற்கெனவே கடந்த ஆண்டில் மராட்டியம் முதல் இடத்திலே இருந்தது – இன்றைக்கு மராட்டியத்தைப் பின்னுக்குத் தள்ளி தமிழகம் இந்தியாவிலே தொழில் வளர்ச்சியில், தொழில் முதலீட்டில் முதல் இடத்தைப் பெற்றிருக்கின்றது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை பெருமிதத்தோடு நான் தெரிவித்துக் கொள்வேன்.

95ஆம் ஆண்டில் தொழில் துறையிலே நாம் ஐந்தாவது இடத்திலே இருந்தோம் என்பதையும் இன்றைக்கு அதைத் தாண்டி முதல் இடத்திற்கு வந்திருக்கிறோம் என்பதையும் நீங்கள் மனதிலே பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

இந்தியா முழுவதிலும் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்ட

தொழில்களின் எண்ணிக்கை 3,503. அவைகளில் 1999 ஏப்ரல் நிலவரப்படி தமிழகத்தில் மட்டும் தொடங்கப்பட்டுள்ள தொழில்களின் எண்ணிக்கை 584. ஆறில் ஒரு பங்கு தொழில்கள் தமிழகத்தில் செயல்படுகின்றன என்பது மற்றொரு பெருமைக்குரிய செய்தியாகும்.

கடன் வைப்புத்தொகை விகிதாச்சாரத்தில் – அகில இந்திய அளவில் சராசரி கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் 55.5 சதவீதம்; ஆனால் தமிழகத்தின் கடன் வைப்புத் தொகை விகிதாச்சாரம் 92.3 சதவீத நிலைக்கு உயர்ந்து, தமிழகம் அதிலும் இந்தியாவில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

### தொழில் வளர்ச்சிக்கு மேலும் 17 ஆயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தல்

இன்னொன்று – 1995–96–இல் அது எந்தக் காலம் என்பது உங்களுக்குத் தெரியும். அப்பொழுது ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் (Software) மதிப்பு ரூ.37 கோடி. 1998–99இல் ஏற்றுமதி செய்யப்பட்ட மென்பொருள்களின் (Software) மதிப்பு ரூ.1246.14 கோடி. டிட்கோ மூலம் நில எடுப்பிலே நாம் புரிந்த சாதனையை நோக்கினால் – 1991 முதல் 1996 வரை டிட்கோ நிறுவனம் தொழில் வளருவதற்காக கையகப்படுத்திய நிலம் 775 ஏக்கர் தான். 1996க்குப் பிறகு இந்த மூன்றாண்டு காலத்தில் எடுக்கப்பட்ட நிலம் 4,820 ஏக்கர்.

மேலும் 17 ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 91லிருந்து 96 வரை சிப்காட் மூலம் தொழிலுக்காக எடுக்கப்பட்ட நிலம் 41 ஏக்கர்தான். இந்த மூன்றாண்டு காலத்திலே இந்த ஆட்சியிலே எடுக்கப்பட்ட நிலம் 3,766 ஏக்கர் நிலமாகும்.

இந்த நிலம் எல்லாம் எடுக்கப்பட்டது அரசுக்காக – தனிப்பட்ட நபருக்காக அல்ல என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஆகவே தமிழகம் வளர தமிழகத்திலே தொழில் வளர நாம் எடுத்துள்ள முயற்சிக்கு உறுதுணையாக இந்த நிறுவனமும் இங்கே அமைந்திருக்கிறது என்பதை எண்ணியெண்ணி நான் பெருமையுற்று அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

***– சென்னையை அடுத்த இருங்காட்டுக் கோட்டையில் அமைந்துள்ள சிப்காட் – தொழிற்பூங்காவில் 27–10–99 அன்று மட்சூசிடா குளிர் சாதனப் பெட்டி தொழிற்சாலையின் தொடக்க விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு தொழிற்சாலையினை தொடங்கி வைத்து ஆற்றிய உரை.*** ★

# நிலமகளின் சீற்றம்

**– சாமி பழனியப்பன்**

எண்ணரிய பெருஞ்செல்வம் கொண்டுதிகழ் கின்றாய்
எழுதரிய சிறப்போடு நின்றுமகிழ் கின்றாய்
மண்ணகத்து மக்கள்பலர் மனந்திரிந்த தாலோ
மனம்வெம்பி பேய்ச்சிரிப்பு நீகாட்டத் துணிந்தாய்

நிலமகளே நின்பொறுமை உயர்ந்த தென்பார்
நீசினந்தால் இவ்வையம் பொறுப்ப தாமோ?

நல்லவர்கள் நிலைமையினைக் கண்டுமனம் நாணி
நடுங்கிடுவர் என்பார்கள்; அதுபோல நீயும்
எல்லாமும் தனக்கென்னும் பொல்லாரைக் கண்டு
இதயந்தான் நாணிமிக நடுங்கினையோ ஐயோ!

நிலமகளே நின்பொறுமை உயர்ந்த தென்பார்
நீசினந்தால் இவ்வையம் பொறுப்ப தாமோ?

மற்றவரின் பெருந்துன்பம் கண்டுமனம் நோவா
மாபாவி சிலர்போல குழந்தையெலாம் கதற
பெற்றவர்கள் உளம்பதறி உடல்பதறி நிற்கப்
பெருநிலமே நீசிரிக்க மனம்வந்த தேயோ?

நிலமகளே நின்பொறுமை உயர்ந்த தென்பார்
நீசினந்தால் இவ்வையம் பொறுப்ப தாமோ?

நான்பெரியன் நானுயர்ந்தோன் என்கின்ற பொல்லா
நச்சகத்தை கொண்டிருந்த நானிலத்திற் சில்லோர்
தான்தோன்றித் தனமாகத் திரிவதனைக் கண்டோ
தாங்காமல் மனம்வெம்பி மூச்சுயிர்த்தாய் நீயும்?

நிலமகளே நின்பொறுமை உயர்ந்த தென்பார்
நீசினந்தால் இவ்வையம் பொறுப்ப தாமோ?




மலைகளினைப் பொடித்தாய்பல் ஏரிகளைத் தூர்த்தாய்
வளைந்தோடும் ஆறுகளை திசைமாற்றம் செய்தாய்
நிலையில்லை மானிடரின் வாழ்வென்ப துணர்த்த
நினைத்தேதான் வாய்பிளந்து சிரித்தாயோ ஐயோ!

நிலமகளே நின்பொறுமை உயர்ந்த தென்பார்
நீசினந்தால் இவ்வையம் பொறுப்ப தாமோ?

# மாணவர்களிடம் ஆசிரியர்கள் ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

# மனநிறைவோடு ஆசிரியர்கள் கடமையைச் செய்யவேண்டும்.



– மாண்புமிகு கல்வி அமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்**

இன்றைக்கு சந்தவாசல் மேல்நிலைப்பள்ளியிலே அண்மையிலே வேலைவாய்ப்பு உறுதி அளிக்கிற திட்டத்தின் மூலமாக கிடைத்த நிதியைக்கொண்டு, கட்டி முடிக்கப்பட்ட இரண்டு வகுப்பறைகளைத் திறந்து வைப்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அதற்கு முன்னாலும்கூட இந்தப் பள்ளிக்கூடத்திற்கான பல வகுப்பறைகள் சட்டமன்ற உறுப்பினர் நிதி முதலான நிதி உதவியைக் கொண்டுதான் நடைபெற்றிருக்கிறது. மேலும் அப்படிப்பட்ட திட்டங்கள் மூலமாக தேவையான வகுப்பறைகள் பெற்று ஒரு நிறைவான பள்ளிக்கூடமாக இது விளங்கவேண்டும் என்று என்னுடைய நல்லெண்ணத்தை வாழ்த்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பள்ளியிலே ஏறத்தாழ 1375 மாணவ; மாணவிகள் படிக்கிற ஒரு நல்ல நிலைமை இருக்கிறது. ஏராளமான மாணவர்கள், மாணவிகள் இன்றைக்கு நாட்டிலே ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலேயும் 1,000 பேர், 800 பேர் என்று படிக்கக் கூடிய ஒருநிலை வளர்ந்துகொண்டிருக்கிறது. கல்வியிலே இன்றைக்கு மக்கள் ஆர்வம்கொள்ள தொடங்கியிருக்கிறார்கள். பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் மிகுந்த ஆர்வத்தோடு கடமையாற்றுகிறார்கள்.

**கல்வியில் நாட்டமுடையவர்களால் பள்ளிக்கூடங்களுக்குப் பெருமை**

பள்ளிகளுடைய சிறப்பு என்பது கட்டடத்திலே இல்லை. கட்டடம் கட்டாயம் தேவை. ஆனால் அதைவிட பள்ளிக்கூடத்திலே படிக்கிற மாணவர்களுக்கு ஆசிரியர்கள் எந்த அளவுக்கு அவர்களுக்குக் கல்வியிலே மிகுந்த நாட்டமுடையவர்களாக, ஆர்வமுடையவர்களாக பிள்ளைகளை வளர்க்கிறார்கள் என்பதுதான் பள்ளிக்கூடத்திற்குப் பெருமை.

திருவள்ளுவருடைய திருக்குறளைப் போல ஒரு உயர்ந்த அறநூல், ஒழுக்கநூல், பண்பாட்டு அடிப்படையிலே மக்களுடைய வாழ்க்கையை உருவாக்கித் தந்த நூல் மனிதனை மனிதனாக்குவதற்காக, நல்ல மனிதனாக ஆக்குவதற்காக இயற்றப்பட்ட, சிறந்த நெறி விளக்க நூல் திருக்குறளைப்போல இன்னொரு நூல் கிடையாது. அந்த வள்ளுவர் சொன்னார் - வாழ்நாள் முழுவதும் படிக்க வேண்டும். கற்றுக்கொண்டே இருக்கவேண்டும்.

நான் கல்வித்துறையிலே இருக்கிற அதிகாரிகளையெல்லாம் கேட்டுக்கொள்வது அவ்வப்போது பள்ளிக்கூடத்தை மேற்பார்வை செய்து, பள்ளிக்கூடத்திற்கு வராத ஆசிரியர் இருப்பாரேயானால் வந்ததாகச் சொல்லிவிட்டு, வேறு வேலை பார்க்கிற ஆசிரியர் இருப்பாரேயானால், அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுத்து பள்ளிக்கூடத்தை கடமையுணர்ச்சியோடு கவனிக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்த வேண்டும்.

**மாணவர்களிடம் ஆசிரியர்கள் ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும்**

பள்ளிக்கூடங்கள் சிறந்து விளங்கினாலும்கூட ஆசிரியர்கள் பிள்ளைகளிடத்தில் கல்வி கற்பதில் ஒரு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். வெறும் பாடத்தை படிக்கிறான். கேள்வி கேட்டால் பதில் சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல படிப்பு, இன்னும் தெரிந்து கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் இவ்வளவு நேரம் பாடம் நடத்துகிறாரே என்று அலுப்பு வரக்கூடாது. தேர்வு வைக்கிறார்களே என்று வெறுப்பு வரக்கூடாது. கேள்வி

கேட்கிறார்கள், ஏன் கேட்கிறார்கள் என்ற எண்ணம் வரக்கூடாது. நமக்காக கேட்கிறார். நம்முடைய அறிவை நாம் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக கேட்கிறார். நம்முடைய முன்னேற்றத்திற்கு ஒரு படிக்கல்லாகத்தான் தேர்வு வருகிறது. இதுகளிலே எல்லாம் தேர்ச்சி பெற்றால்தான் நம்முடைய அறிவு தெளிவுடையதாக ஆற்றல் உடையதாக வளரும் என்று சொல்லி உணருகிற அளவுக்கு ஆசிரியர்கள், மாணவர்களிடத்திலே ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர்கள், மாணவர்கள் தங்களுடைய மூளை ஆற்றலை பயன்படுத்தினால் தங்களால் படிக்கமுடியும் என்ற நம்பிக்கையோடு படிக்கலாம். இன்னும் சொல்லப் போனால், படிக்காதவர்களுடைய வீட்டுப் பிள்ளை படித்து ஆராய்ச்சியாளராக ஆகி, விஞ்ஞானியானவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்.

இன்றைக்கு மிகப்பெரிய விஞ்ஞானி என்று கேள்விப்படுகிறீர்கள் அபுல்கலாம் என்ற அப்துல் கலாம் என்பவர். அந்த அப்துல் கலாம் உங்களைப் போல இராமேஸ்வரத்தில் இருக்கிற ஒரு பள்ளிக்கூடத்திலே படித்தவர்தான். ஏழைக் குடும்பத்திலே பிறந்தவர்தான். அவருடைய பெற்றோர்கள் அதிகம் படிக்கவில்லை. அவர் படித்து நம்முடைய பள்ளிக்கூடத்திலே அன்றைக்கிருந்த எஸ்.எஸ்.எல்.சி. படிப்பு. திருச்சியிலே இருக்கிற செயிண்ட் ஜோசப் கல்லூரியிலே படித்து, அங்கே சயின்ஸ் படித்த காரணத்தால் சயின்ஸ் பாடம் படித்து அந்தத் துறையிலே சேர்ந்து இன்றைக்கு இந்தியாவுக்கு அணுகுண்டு தயாரிப்பதற்குத் தேவையான அறிவாற்றல் மிக்க விஞ்ஞானி அப்துல் கலாம் என்று சொல்லக்கூடிய நிலையை பெற்றிருக்கிறார்.

## அறிவியலில் அடிப்படைச் செய்தி நமக்கு நன்றாக தெரியவேண்டும்

இன்னொன்று, இந்தக் காலம் அறிவியல் வளர்ச்சியினாலே தான் உலகம் முன்னேறியிருக்கிறது. எனவே அறிவியலில் அடிப்படை செய்திதான் நமக்கு நன்றாக தெரிய வேண்டும். ஆசிரியர்களையும் நான் வேண்டி கேட்டுக்கொள்வேன். அறிவியல் பாடம் நடத்துகிற ஆசிரியர்கள் அந்த ஒரு பாடத்தில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் அப்படியே தெரிவித்துக் கொண்டிருந்தால் போதாது. அறிவியல் பாடம் நடத்துகிற போது பிள்ளைகளுக்கு ஊக்கம் வரக்கூடிய முறையில் எந்தெந்த அறிவியல் நுட்பமான பொருள்களை யார் யார் கண்டுபிடித்தார்கள், எவ்வளவு கஷ்டப்பட்டு கண்டுபிடித்தார்கள்? அறிவியல் மேதைகள் எவ்வளவு பெரிய தியாகம் செய்திருக்கிறார்கள்? அந்த அறிவியல் உண்மைகளால் உலகத்திற்கு எவ்வளவு பெரிய நன்மை என்று அவ்வப்போது பிள்ளைகளுடைய மனதில் ஊக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

அரசாங்கம் கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு, ஏழைப்பிள்ளைகளுக்குச் சோறுபோட்டால் தான் அந்த பிள்ளைகள் படிப்பார்கள் என்று ஒரு 30 ஆண்டு காலமாக தமிழ்நாட்டிலே நாம் செய்கிறோம். ஆகவே அரசாங்கத்திற்கு இருக்கிற அக்கறை நாட்டு மக்களுக்கு எதிர்கால நாட்டுக் குடிமக்கள் நீங்கள் உங்களில் அறிவுள்ளவர்களாக வளர வளர நாடு நல்ல நிலையை அடையும்.

படிக்காத பிள்ளைகள் இருக்கிற ஊரிலே எல்லா பிள்ளைகளும் 8ஆவது, 10ஆவது படித்தவர்கள் என்று சொன்னால் ஜனநாயகத்திலே அது பெரிய மறுமலர்ச்சி. நல்ல பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் ஆற்றல் அந்த குடிமக்களுக்கு ஏற்படுகிறது. எங்களுடைய நாட்டிலே படிக்காதவர்கள் யாருமில்லை என்று சொல்கிற ஒருநிலையை இந்தியா அடையவேண்டும் என்று 20 ஆண்டாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே 100-க்கு 85 பேர், 90 பேர் கையெழுத்து போடத் தெரிந்த இடத்திற்கு வந்திருக்கிறோம். இன்னும் 100-க்கு 10 பேர், 15 பேர் கையெழுத்துப் போட முடியாத கிராமத்து மக்கள் இருக்கிறார்கள்.

## மனநிறைவோடு ஆசிரியர்கள் கடமையைச் செய்யவேண்டும்

எதிர்காலத்திலே எல்லோரும் கட்டாயமாகப் படிக்கவேண்டும். அது கலைஞருடைய அறிவிப்பு. அதற்காக பல இடங்களில் தொடக்கப் பள்ளிகள் எல்லாம் தொடங்கி, யார் வீட்டிலே பிள்ளைகள் வைத்திருக்கிறார்களோ, 5 வயதானால் கட்டாயம் பள்ளிக்கூடம் அனுப்புங்கள். அவர்கள் பத்து வயதானால் மேல்நிலைப்பள்ளியிலே 5,6ஆவது வகுப்பு படிக்கிற அளவுக்கு அவர்களை தயாராக்குங்கள். எப்படியாவது படிக்க வையுங்கள். குறைந்தது 14,15 வயது வரையில் எல்லா குழந்தைகளும் படிக்கவேண்டும். அந்த குறிக்கோளை வைத்து அரசு செயல்படுகிறது. நம்முடைய பிள்ளைகள் தன்னம்பிக்கையோடு படிக்கவேண்டும்.இன்னொரு பெரிய உண்மை 15 வயதிலே, 16 வயதிலே படிக்காமல் விட்டுட்டா அப்புறம் 30 வயதிலே படிக்க முடியாது.

யாராக இருந்தாலும் ஆசிரியராக இருந்தால்கூட சிறுவயதில் எல்லா அடிப்படைகளையும் தெரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அக்கறையாக படித்துவிட்டால், பெரிய வளர்ச்சியடையலாம்.

அதனாலே நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், படிக்கிறது வாத்தியாருக்காக அல்ல, பெற்றோர்களுக்காக அல்ல, நம்முடைய தகுதியை உயர்த்திக் கொள்ள, அந்த உணர்வோடு நீங்கள் எல்லாம் படிக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு, இங்கே இருக்கிற ஆசிரியர்கள் தங்களுடைய கடமையை மனநிறைவு அளிக்கத்தக்க அளவுக்கு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ★

# கிங் நோய்த்தடுப்பு மருந்து நிலையம்

கிங் நோய்த்தடுப்பு மருந்து நிலையம் ஒரு தமிழ் நாடு அரசு நிறுவனம். மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் இயங்கி வருகிறது.

இந்நிலையம் 100 ஆண்டுகளுக்கு முன் 1899ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி அப்போதைய ஆங்கில அரசால் நிறுவப்பட்டது. பரந்த 40 ஏக்கர் நிலப்பரப்பில் கிண்டியில் அமைந்துள்ளது. இதன் முதல் சுகாதார ஆய்வாளர் திரு. டபிள்யூ. ஜி. கிங் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டது. ஆரம்பத்தில் இந்நிலையம் பெரியம்மை நோய்த் தடுப்பு மருந்து சேகரித்து வைக்கும் இடமாக இருந்தது. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில், பெரியம்மை மிகக் கொடிய நோயாக இருந்தது. நாளடைவில் பெரியம்மை நோய்த்தடுப்பு மருந்து தயாரிப்பிலும் ஈடுபட உலக சுகாதார நிறுவனத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களுள் கிங் நிலையமும் ஒன்று. பெரியம்மை நோய்த்தடுப்பு மருந்தை திடவடிவில் (தூள் வடிவில்) தயாரித்து இந்நோயை முற்றிலும் ஒழிப்பதில் பெரும்பங்கு ஆற்றியது. இச்சேவையைப் பாராட்டி, 1970ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 'யுனெஸ்கோ' விருதை இந்நிலையத்திற்கு அளித்தார்கள்.

பின் பல்வேறு கால கட்டங்களில் மனித சமுதாயத்தின் தேவைக்கேற்ப பல்வேறு உயிர்காக்கும் நோய்த்தடுப்பு மருந்துகள் தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. வரும் முன் காத்தலே அறிவுடைமை என்று நாம் அனைவரும் அறிவோம். தற்போது பல முக்கிய வியாதிகள் வராமலிருக்க தடுப்பு மருந்துகள் உள்ளன.

## தற்போது இந்நிலையத்தில் தயாரிக்கப்படும் தடுப்பு மருந்துகள்

### வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பு மருந்து (ரேபீஸ் வாக்சின்)

இந்நோயானது 'ரேபீஸ் வைரஸ்' எனப்படும் மிகச் சிறிய நுண்ணுயிரால் ஏற்படுகிறது. இந்த நோயுள்ள நாய், பூனை மற்றும் நரி இனத்தைச் சேர்ந்த மிருகங்கள் கடிப்பதால் மனிதர்களுக்கு இந்நோய் பரவுகிறது. உமிழ்நீரிலுள்ள கிருமிகள், கடிப்பதால் ஏற்படும் காயத்தின் வழியாக உடலுக்குள் சென்று, நரம்புகள் வழியாக மூளையை அடைகிறது. அங்கு பல்கி பெருகி இந்நோயை உண்டாக்குகிறது. இந்த நோயை குணமாக்க, மருந்துகள் ஏதும் இல்லை. இந்த நோய் கண்டவர் இறக்க வேண்டிய நிலை தான்

உள்ளது. ஆனால் இந்த நோய் முற்றிலும் வராமல் தடுக்க, தடுப்பு மருந்துகள் உள்ளன.

இந்த நோயைப் பரப்பும் மிருகங்களின் கடி ஏற்பட்டவுடன் அவ்விடத்தை உடனடியாக சோப்பும் நீரும் கொண்டு கழுவவேண்டும். பிறகு மருத்துவரை அணுகி, அவருடைய ஆலோசனையின் பேரில் தேவையான அளவு இத்தடுப்பு மருந்தை போட்டுக் கொண்டால் இந்நோய் வராமல் நிச்சயம் தடுத்து விடலாம்.

இந்நிலையத்தில் தயாரிக்கப்படும் இத்தடுப்பு மருந்தானது, தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக, இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டு, அங்கே இலவசமாக போடப்படுகின்றன. மேலும், தனியார் மருத்துவமனைக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

★ நல்ல பாம்பு (Cobra)

★ கட்டுவிரியன் (Common Krait)

★ கண்ணாடி விரியன் (Russel's Viper)

★ சுருட்டைப்பாம்பு (Saw scaled viper)

முன்பு அதிக அளவில் மக்கள் பாம்புக்கடியால் இறந்திருக்கிறார்கள். 'விஷ முறிவு மருந்து' கண்டுபிடிக்கப்பட்ட பின்பு இறப்பவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது. பாம்புகளின் விஷம் நரம்பு மண்டலம், மற்றும் இரத்தத்தை மிகவும் பாதிக்கும் 'பாம்பு கடி நஞ்சு முறிவு மருந்தானது' மேற்சொன்ன நான்கு வகையான பாம்புகளின் நஞ்சை முறிக்கும் தன்மை கொண்டது.



தரக் கட்டுப்பாடு பிரிவில் மருந்துகள் பரிசோதனை

**பாம்புக்கடி நஞ்சு முறிப்பு மருந்து**
(Anti Snake Venom Serum)

இந்தியாவில் 239 வகையான பாம்புகள் உள்ளன. இவற்றுள் சுமார் 59 வகை விஷமுள்ளவை. இதிலும் நான்கு வகைதான் மனிதர்கள் உறையும் இடங்களில் வசித்து பாம்புக்கடிகள் ஏற்பட காரணமாக உள்ளன. அவை

கிங் நிலையம் தமிழ்நாட்டிற்கு முழுவதும் தேவையான இம்மருந்தை தயாரித்து, எல்லா அரசு மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்படுகிறது. அங்கு மக்களுக்கு இலவசமாகப் போடப்படுகின்றன.

பாம்புக்கடி பட்டவுடன் முதலுதவி சிகிச்சை கண்டிப்பாக செய்ய வேண்டும். பாம்பு கடித்த நேரத்திற்கும், மருத்துவமனையில், விஷ முறிவு மருந்து செல்வதற்கும் இடைப்பட்ட நேரம்



பல்வேறு தடுப்பு மருந்துகளை தர நிர்ணயம் செய்ய பயன்படுத்தப்படும் சிறு பிராணிகள்.

எவ்வளவு குறுகியதாக உள்ளதோ, அவ்வளவிற்கு உயிர் பிழைக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கும்.

### இரண ஜன்னி தடுப்பு மருந்து (டெட்டனஸ் டாக்ஸைடு)

இரண ஜன்னி (Tetanus) நோயானது ஒரு வகை பாக்டீரியாவால் ஏற்படுகிறது. காயங்கள் வழியாக உடலுக்குள் செல்லும் இக்கிருமியானது, உயிருக்கு ஆபத்தான இரண ஜன்னி நோயை ஏற்படுத்துகிறது. இந்நோய் கண்டபின் சிகிச்சை செய்து நோயாளிகளைக் காப்பாற்றுவது மிகக் கடினமான ஒன்று. 'டெட்டனஸ் டாக்ஸைடு' எனப்படும் இத்தடுப்பு மருந்தால் இந்நோய் வராமல் முற்றிலும் தடுத்துவிடலாம். இத்தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இந்நோய் ஏற்படுவது மிகக் குறைந்துள்ளது. பொதுவாக காயம் பட்டவர்கள் அனைவர்க்கும், கர்ப்பிணிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. குழந்தைகளுக்கு 'முத்தடுப்பு மருந்தில்' (Triple Antigen) ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டு கொடுக்கப்படுகிறது.

இந்நிலையத்தில் தயாரிக்கப்படும் இத்தடுப்பு மருந்தானது, தமிழ்நாட்டிலுள்ள எல்லா அரசு மருத்துவமனைகளிலும் மக்களுக்கு இலவசமாகப் போடப்படுகிறது.

### காலரா மற்றும் டைபாய்டு தடுப்பு மருந்துகள்

இந்நிலையத்தில் மேற்கண்ட தடுப்பூசி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள எல்லா அரசு மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டு, இலவசமாக போடப்படுகின்றன. மேலும் இம்மருந்துகள், அண்டை மாநிலங்களுக்கும், இந்திய இராணுவத்துறைக்கும் அளிக்கப் படுகின்றன. இம்மருந்துகளை மேலும் மேம்படுத்தப்பட்ட முறையில் தயாரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து (டிப்தீரியா டாக்ஸாய்டு)

பொதுவாக குழந்தைகளுக்கு ஏற்படும் இந்நோயானது உயிர்க்கு ஆபத்தை விளைவிப்பதாகும். இப்பிரிவில் தயாரிக்கப்படும் டிப்தீரியா டாக்ஸாய்டு மருந்துடன் இரண ஜன்னி பிரிவில் தயாரிக்கப்படும் டெட்டனஸ் டாக்ஸைடையும் சேர்த்து 'டியூயல் ஆண்டிஜன்' தயாரிக்கப்படுகிறது.

தன் பிணிப்பால் (Auto Vaccine) நாள்பட்ட (chronic) மற்றும் ஆண்டிபயாட்டிக் மருந்துகளுக்கு

கட்டுப்படாத பாக்டீரியாக்களினால், திரும்ப திரும்ப (Recurrent) ஏற்படும் கட்டி, பருக்கள் மற்றும் கொப்புளங்கள் அல்லது தொண்டைப் புண் ஆகியவை தாக்கப்பட்ட நோயாளிகளிடமிருந்து, சீழ், கோழை போன்ற (தேவைக்கேற்ப) சோதனை மாதிரிகளை எடுத்து அதிலிருந்து பாக்டீரிய கிருமி களை வளர்த்து பிரித்து எடுக்கப்படுகிறது. அதே கிருமிகளை தடுப்பூசி மருந்தாக தயாரித்து அதே நோயாளிகளுக்கு செலுத்தும் சிகிச்சைக்குப் பயன்படும் "ஆட்டோஜீனஸ்" தடுப்பூசி மருந்தும் இங்கு தயாரிக்கப்படுகிறது. நுண்ணுயிரியல் ஆய்வகங்களுக்குத் தேவையான உயிரியல் சோதனைப் பொருட்கள் (Diagnostic Reagents) தயாரித்து மருத்துவக் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் மற்றும் ஆய்வகங்களுக்கு குறைந்த கட்டணத்தில் வழங்கப்படுகிறது.

இவற்றைத் தவிர பல்வேறு சேவைப் பிரிவுகளும் இந்நிலையத்தில் தொடங்கப்பட்டு, மக்கள் உடல் நலத்தைப் பேணுவதில் உறுதுணையாக உள்ளன.

**மருத்துவ நுண்ணுயிரியல் சோதனைக் கூடம்** (Diagnostic Lab.)

★ இப்பிரிவில், நோயாளிகளின் சிறுநீர், இரத்தம், கோழை ஆகியவற்றை குறைந்த கட்டணத்திற்கு சோதனை செய்து தரப்படுகிறது.


★ உடல் உபாதைகளை ஏற்படுத்தும் நச்சு உணவிற்கு (Food Poisoning) காரணமான கிருமிகள் இச்சோதனைக் கூடத்தில் கண்டறியப்படுகின்றன.

★ காலரா போன்ற தொற்று நோய்கள், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏற்படும் அபாயம் ஏற்படும்போது, மலம் போன்ற மாதிரிகளைச் சேகரித்து ஆய்வு செய்து நோயைத் தடுக்க உதவுகிறது.


★ நம் நாட்டைச் சேர்ந்த மற்றும் அயல் நாட்டைச் சேர்ந்த மிகமிக முக்கிய பிரமுகர்கள் (அதிபர், பிரதமர் போன்றோர்) இந்நகரத்திற்கு வருகைத் தரும் போது அவர்களுக்கு அளிக்கப்படும் உணவுகளின் மாதிரிகளைப் பரிசோதித்து, அவை சுகாதார முறையில் தயாரிக்கப் பட்டனவா? என்று பரிசோதித்து சான்றளிக்கப்படுகிறது.

**நச்சு நுண்ணுயிரியர் ஆய்வுக் கூடம் (வைராலஜி பிரிவு)**

★ இளம்பிள்ளை வாதம் (போலியோ) நோய் குறித்த சோதனைகள் மேற்கொள்ளும் இந்த ஆய்வுக் கூடம் மத்திய அரசாங்கத்தாலும் உலக சுகாதார நிறுவனத்தாலும் அங்கீகரிக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது.



தடுப்பு மருந்துகளை குப்பிகளில் நிரப்புவதற்கு பயன்படும் உபகரணம்.



டெட்டனஸ் டாக்ஸாய்ட் தயாரிப்பு.

**தொழில் நுட்பப் பயிற்சி பள்ளி**

இங்கு 1994ஆம் வருடம் முதல் மருத்துவ ஆய்வுக் கூட நுட்பனர் பயிற்சி அளிக்க 2 ஆண்டு பட்டயப் படிப்பில் 46 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

ஆய்வுக் கூட நுட்பனர் நிலை 2ல் உள்ளோர்க்கு நிலை 1 பயிற்சி அளிக்கப்படுகிறது.

**கல்வி பற்றிய பிரிவுகள்**

மைக்ரோ பயாலஜியில், முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு இங்குள்ள பல்வேறு பிரிவுகளில் சில மாதங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**நூலகம்**

இங்கு மருத்துவப் படிப்பு சம்பந்தமான, குறிப்பாக மைக்ரோபயாலஜி, வைராலஜி, பயோ கெமிஸ்ட்ரி மற்றும் அதன் தொடர்புடைய புத்தகங்களும் சஞ்சிகைகளும் கொண்டு சிறந்த நூலகமாக உள்ளது.

## பராமரிப்பு பிரிவுகள்

**இயந்திர சாதனப் பிரிவு**

கிங் நிலையம் முழுமைக்கும் நீரேற்று நிலையத்தின் வாயிலாக தண்ணீர் அளிக்கப் படுகிறது. பெரிய கொதிகலன்களை இயக்கி நீராவியைப் பிரிவுகளுக்கு வழங்குகிறது. பல முக்கிய இயந்திரங்களைப் பராமரிக்கிறது.

**மின்சாரப் பிரிவு**

டிரான்ஸ்பார்மர், ஜெனரேட்டர் போன்றவைகளை இயக்கி இந்நிலையத்திற்கு மின் சக்தியைத் தருகிறது. பிரிவில் உள்ள மின்சார சாதனங்களைப் பராமரிக்கிறது.

**குளிர் பதனப் பிரிவு**


இந்நிலையத்தில் தயாரிக்கப்படும் உயிர்காக்கும் மருந்துகள் கெட்டுவிடாமல் பாதுகாக்க –20 சி. பனி உறைநிலை இயங்கும் குளிர் பதன அறை ஒன்றும் +4 சி யில் இயங்கும் பல குளிர் பதன அறைகளும் பல குளிர்சாதனங்களையும் இயக்கி பராமரித்து வருகிறது.

**ஒரு நூற்றாண்டு காலமாக நோய் தடுப்பு மருந்துகளை தயாரித்து நாட்டு மக்களை பாதுகாத்து வரும் கிங் நிலையத்தின் பணிகளைப் பாராட்டுவோம்.**


★ ★ ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 பேக்ஸ் : 5368927


டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை - இராயப்பேட்டை நெடுஞ்சாலை சந்திப்பில்
புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்




ஆழ்வார்ப்பேட்டை சந்திப்பில் புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்




சர்தார் பட்டேல் சாலை - காந்தி மண்டபம் சாலை சந்திப்பில்
புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்



சர்தார் பட்டேல் சாலை - லாட்டிஸ் பாலம் சாலை சந்திப்பில்
புதிதாக அமையவிருக்கும் மேம்பாலம்







தமிழரசு

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23

